# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

▪ தடி-2, அடி-8 ▪ நவம்பர் 2018 ▪ தனிச்சுற்றுக்கு மட்டும் ▪ நன்கொடை ரூ.20



## குழந்தைகளை வளர்க்காதீர்கள்... வளரவிடுங்கள்!

## குழந்தைகளை வெற்றிபெற நினைக்காதீர்கள்..!

குழந்தைகள் தின சிறப்புக் கட்டுரைகள்

# கருஞ்சட்டைப் பதிப்பகம்

## தொடக்க விழா மற்றும் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா!

**17.11.2018** சனிக்கிழமை மாலை 6 மணி
இந்திய அதிகாரிகள் சங்கக் கலையரங்கம்,
இராயப்பேட்டை (அண்ணா சிலை அருகில்) சென்னை–14

**நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை:**

திருமதி. **சுப்புலட்சுமி ஜெகதீசன்**

**கருத்துரை:**

வழக்கறிஞர் **அருள்மொழி**
கவிஞர் **சல்மா**
பேராசிரியர் **சுந்தரவள்ளி**
பேராசிரியர் **வாணி அறிவாளன்**

**வெளியிடப்படவிருக்கும் நூல்கள்**

தோழர் **ஓவியா**வின்
“கருஞ்சட்டைப் பெண்கள்”

மருத்துவர் **ஷாலினி**யின்
“கொஞ்சம் டார்வின் கொஞ்சம் டாக்கின்ஸ்”

கவிஞர் **கலைச்செல்வி**யின்
“நற்றிணை நயச்சொல்லோவியம்”

தோழர் **உமா**வின்
“கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாய் இருக்கிறது”

அனைவரும் வருக! **அனைவரும் வருக!** அனைவரும் வருக!

# குழந்தைகள் கல்வி

இந்நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நாம், நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ள ஏதாவது சாதனமிருக்கிறதா என்று பார்ப்போம். நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

பள்ளியில் படிக்கும்போது ஏதாவது தெரிந்து கொள்ளலாமா என்றால் அங்கு தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் கிடையாது; எவ்விதப் பாடப் புத்தகமும் கிடையாது. “அரிவரி” பால பாடம் படிக்கும் போது “அய்யர்” “பிராமணன்” போன்ற வார்த்தைகள் தாம் காணப்படுகின்றனவே அன்றித் தமிழர் திராவிடர் என்கின்ற வார்த்தைகளுக்கு அங்கு இடமோ, அவகாசமோ கிடையவே கிடையாது.

மேல் வகுப்புக்கு வந்து அங்கு ஏதாவது தெரிந்து கொள்ளலாம் என்றாலோ அதற்கும் இடம் இல்லை.தமிழ்நாட்டுச் சரித்திரமே இல்லை. இந்து தேச சரித்திரம் என்பதை எடுத்துக்கொண்டால் இராமாயண-பாரதமும், அசோகன்- மவுரியன் ஆட்சியும், முஸ்லிம்- வெள்ளையர் ஆட்சியும்தான் விளக்கப்படுமே ஒழிய சேர, சோழ பாண்டியரைப் பற்றியோ, திராவிட- தமிழர் என்கின்ற ஆட்சியைப் பற்றியோ காண்பது மிகவும் அருமையேயாகும். அவைகள் எந்த வகுப்புக்கும் பாடமாக இல்லை.அப்படி ஏதாவது எங்காவது காண அது பெரும் பித்தலாட்டமும், மோசடியுமாகத்தான் காணப்படலாமே தவிர, யோக்கியமாய், சரித்திர ஆதார முறையாய்க் காண்பதற்கு இடமே இல்லை.

ஆகவே, நமது பிள்ளைகள் நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ள இடமும் இல்லை, வசதியும் இல்லையென்று தான் சொல்லவேண்டும். இன்றும், சொல்லுகிறோம்- தமிழன் ஆரியருக்கு முன் என்ன சமயத்தவனாய் இருந்தான், அவன் கடவுள் எப்படிப்பட்டது, அவனது வாழ்க்கை முறை எப்படிப்பட்டது- என்பன போன்றவைகளைக் காட்ட, சரியான சரித்திர ஆதாரம் ஒன்றும் காணப்படுவதில்லை.

‘தமிழர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள்’ என்பதற்கே ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பள்ளிக்கூடத்திலோ, சரித்திரங்களிலோ நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆதாரங்கள் இல்லை. என்பதோடு- தமிழ் நூல்கள் என்பவைகளிலாவது தனித் தமிழர் நிலை எப்படி இருந்தது என்றும், அனுபவப்பூர்வமான அவர்களது வாழ்க்கை எப்படி இருந்தது என்றும் தெரிந்துக்கொள்ளப் போதிய ஆதாரங்கள் கிடையாது.

இன்றும் நம் கண்முன் காணப்படும் தமிழர் வாழ்க்கை என்பதெல்லாம் ஆரியரைப் பார்த்து அதுபோல் வேஷம் போட்டுக்கொண்டு, அவர்களது சாதனைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களைப் பின்பற்றுவது என்பதல்லாமல், வேறுஒன்றும் காண்பதற்கு இல்லை.ஆரியர் கடவுள்கள், அவர்களது சமயங்கள், அவை சம்பந்தமான ஆரியர் கதைகள், அவர்களது ஆகமங்கள் , அவர்கள் சாஸ்திரங்கள், அவர்களது நீதி நூல்கள் ஆகியவைகளை நம் பண்டிதர்கள் கற்றுக்கொண்ட, அவை நமக்குப் போதிக்கப்படுவனவாக இருக்கின்றன.

இவைகளை மாற்றித் தமிழர்களுக்கு என்று மற்ற நாட்டாரையும் மற்ற இனத்தாரையும் போல் ஏதாவது பாடங்கள், சரித்திரங்கள் முதலியவை கண்டுபிடித்து அல்லது உண்டாக்கி நம் பிள்ளைகளுக்குப் பாடமாகக் கீழ்வகுப்பில் இருந்தே படிப்பிக்கப்பட்டால் ஒழிய, எப்படி அவர்கள் தங்களைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப்படி இல்லாததாலேயே, நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ள நம் பண்டிதர்களே வழிகாட்டிகளாய் இருந்துகொண்டு அவர்களது உச்சிக் குடுமியையும் சாம்பல் மண் பூச்சுக்களையும்- அவர்கள் பாராயணம் செய்யும் புராணக் கதைகளையும் நாம் பின்பற்றிக் கடைந்தெடுத்த முட்டாள்களாக நேர்ந்ததோடு ஆரியருக்கும், ஆரியத்துக்கும் மீளா அடிமைகளாக ஆகியிருக்கும்படி நேர்ந்திருக்கிறது.


தமிழர்களின் படிப்பிற்குக் கீழ்வகுப்புகளிலாகட்டும், இராமாயண- பாரதக் கதைகள் ஏன் சேர்க்கப்படவேண்டும்- அதுவும் தேச சரித்திரத்தில் ஏன் சேர்க்கப்படவேண்டும்?

பஞ்ச காவியங்களைவிட இராமாயணம். பாரதம் எப்படிச் சரித்திர சம்பந்தமான கதைகளாகும்?

பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ள தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்குமானால் இராமாயண- பாரதக் கதைகள் சரித்திரத்திலும், வசன பாடத்திலும் சேர்க்கச் சம்மதித்து இருப்பார்களா? பண்டிதர்கள், உபாத்தியாயர்கள், தமிழ்ச் செல்வர்கள் இக்குறைகளை எடுத்துக்காட்டுவதற்காக நம்மீது பாய்கின்றார்களே தவிர, புராண இதிகாசங்கள்- அதுவும் தமிழர்களுக்கு சம்பந்தமில்லாததும், தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடியதாகவும், தமிழர் முற்போக்கைத் தடுக்கக்கூடியதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமான விஷயங்கள் கொண்ட புராண இதிகாசங்கள் - சமய ஆதாரங்கள் போலவும், புண்ணிய சரித்திரங்கள் போலவும், தேச சரித்திரங்கள் போலவும் நம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதைப் பற்றி கவலைப்படுவதே இல்லை.

இவ்விஷயத்தில் இனியாவது தமிழ்ப் பண்டிதர்கள், தமிழ் உபாத்தியாயர்கள், உண்மைத் தமிழ்ப் பெற்றோர்கள் ஒன்றுகூடி மாநாடு கூட்டி- இம்மாதிரி விஷயங்கள் பள்ளிப் படிப்பில் நுழையாமல் இருக்கும்படி செய்யக்கூடாதா என்று கேட்கின்றோம். தமிழிலே, தமிழ் மொழி இலக்கியத்திலே, தமிழர் நல்வாழ்விலே, தமிழர் தன்மானத்திலே, தமிழர் தனி ஆட்சியிலே கவலையுள்ள நம் செல்வர்களுக்கு- இந்தக் காரியமெல்லாம் முக்கிய கடமை அல்லவா என்றும் கேட்கிறோம்.

தலைமுடி எடுத்துக்கொண்டு, காவடி தூக்கி ஆடி, பழனிக்கும் திருச்செந்தூருக்கும் சென்று வந்துவிட்டால் தமிழர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்ற அர்த்தமா- அல்லது, தாங்கள் பிறந்ததற்குப் பயன் ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தமா? பட்டம், பதவி, நிர்வாகப் பெருமைப் பெற்றுவிட்டால் தமிழர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்று அர்த்தமா? நிலை குலைந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி, அவர்களுக்குத் தன்மான உணர்வும் ஊட்ட வேண்டாமா? தமிழ் மக்களை- அவர்கள் படித்தவர்களானாலும், பண்டிதர்களானாலும், மந்திரி, கவர்னர்- வைசிராய் நிர்வாகச்சபை மெம்பர் ஆனாலும் பகுத்தறிவு விஷயத்தில் மரக்கட்டையாக்கிவிட்டு, தமிழரல்லாதவர் அடிமைப்படுத்திச் சுரண்டிக் கொள்ளைகொள்வதைத் தடுக்கவேண்டாமா? தமிழ் மக்களின் நலத்தில் கவலை உள்ளவர்கள் எது எதற்கு என்றுதான் அழுவது? தமிழர்களுக்குத் தொண்டாற்றுவது என்றால் என்னதான் அர்த்தம்?



ஆகவே, பள்ளிகளில் உள்ள சுத்தத் தமிழாசிரியர்களை, இனியாவது இப்படிப்பட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்காமல் இருக்கக் கேட்டுக்கொள்வதோடு, பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ளவர்கள் இனியாவது இவ்விஷயங்களைக் கவனித்து, புத்தகங்களை அனுமதிக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். நமக்குச் சுதந்திரம் வந்த இலாக்காக்களின் கதியே இப்படி இருக்குமானால், இத்தமிழர்கள் எந்த முகத்தைக் கொண்டு எல்லா இலாக்காக்களிலும் முழு சுதந்திரம் கேட்க முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

**‘குடி அரசு’: தலையங்கம் – 12/02/1944**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**மா.கிருட்டிணன்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**ஓவியர் ரா.ராஜசேகர்**
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி,**
**தே.சுரேஷ், அரவிந்த்,**
**கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு – அலுவலக முகவரி

கைத்தடி
மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

**மதி பப்ளிகேசன்**
2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி – 635 205.
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| மீடூ | 5 |
| வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் | 7 |
| குழந்தைகளை வளர்க்காதீர்கள் வளரவிடுங்கள் | 8 |
| குழந்தைகளை வெற்றிபெற நினைக்காதீர்கள் | 10 |
| 11வது கட்டளை | 13 |
| ஜோதிடத்தை சோதிப்போமா..! | 14 |
| குப்பைக்காரன் | 16 |
| "பாட்டி, ஏன் படிக்கல?" | 18 |
| எச்சில் தொட்டி – தொடர்கதை | 19 |
| டெங்கு: தீவிரம் அறிந்து நடத்தல் | 21 |
| மண்டல் ஓர் மகாசாசனம் | 22 |
| "சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குச் சென்று வழிபட அனைத்து வயது பெண்களுக்கும் உரிமை உண்டு" | 24 |
| உயிர்மெய் – தொடர்கதை | 26 |
| தமிழர் விளையாட்டுகள் – பருப்பு கடைதல் | 28 |
| அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா? | 30 |
| மந்திரமா? தந்திரமா? | 33 |
| ஊர்ப்பறவை – கவிதை | 34 |



| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 20 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri

தோழர் **கனிமொழி**



# மீடூ

இன்றைக்குப் பெருமளவில் தமிழ்நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் செய்தி #metoo என்பது தான். *2006ஆம் ஆண்டு Tarana Burke (தரானா பூர்கே)* என்ற சமூக செயற்பாட்டாளர் மைஸ்பேஸ் *(My Space)* எனும் சமூக வலைதளத்தில் இதை தொடங்கி வைத்தார். இதன் நோக்கம் பெண்கள் குறிப்பாக ஒடுக்கப்பட்ட இனங்களைச் சார்ந்தவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவு பற்றி பதிவு செய்ய இதைத் தொடங்கினார். *"Empowerment through empathy"* என்ற பரப்புரையின் மூலம் இதைத் தொடங்கி வைத்தார். பின் அக்டோபர் 15, 2017ஆம் ஆண்டு நடிகை அலைசா மிலானோ *(Alyssa Milano)* மீண்டும் பாலியல் சீண்டல் குறித்து தெரிவிக்க இதைத் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சி இன்று தமிழ்நாட்டை வந்து அடைந்திருக்கின்றது. இதில் சின்மயி என்ற திரைப்பாடகி பல கர்நாடக சங்கீத துறையைச் சேர்ந்தவர்களை இணைத்து அவர்கள் எப்படி தனக்கு பாலியல் தொந்தரவு தந்தனர் என்பதை டிவிட் செய்திருந்தார். அந்த பட்டியலோடு கவிஞர் வைரமுத்து பெயரும் இடம்பெற்றது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் சூழலை சற்றே நாம் தள்ளிவைத்து இந்தப் பிரச்சினையை முதலில் அணுகலாம்.

திரைத்துறையில் தொடர்ந்து பெண்கள் சந்திக்கும் இடர்கள், ஊடகங்களில் பெண்கள் சந்திக்கும் பாலியல் துன்புறுத்தல்கள் அனைத்தையும் நாம் அறிவோம். இதுவரை இவை பற்றி cinegossips என்ற முறையில் கிசுகிசுக்களாக செய்திகள் வந்து கொண்டு இருந்தன. முதல் முறையாக பாதிக்கப்பட்ட பெண்கள் தாங்கள் எதிர்கொண்ட அனுபவங்களைப் பேசுகின்றனர். அந்தத் தளத்தை நாம் முன்முடிவுகளோடு அணுகுதல் கூடாது. பேசட்டும்; உண்மைகள் என்ன? என்று அறிய விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பது இரண்டாவது கட்டம் தான், முதலில் ஒரு பெண் தான் சார்ந்த துறையில் தனக்கு பாலியல் தொந்தரவு உள்ளது என அனைத்து மனத்தடைகளையும் மீறி வெளியே வருவதை நாம் எந்தக் காரணம் கொண்டும், பார்ப்பனப் பெண் என்பதாலோ அய்யத்தோடு பார்க்கத் தேவை இல்லை. ஏனெனில் இந்தப் பரப்புரையைத் தொடங்கிய *Tarana Burke (தரானா பூர்கே)* அவர்கள் #metoo பரப்புரையின் முக்கியத்துவத்தை பற்றிக் கூறும் போது ,

*This idea one that we call' empowerment through empathy, to not only show the world how widespread and pervasive sexual violence is, but also to let other survivors know they are not alone. #metoo."* என்கிறார்.

அதாவது இந்தப் பரப்புரையின் நோக்கம் என்பது பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறை என்பது உலகளாவியது மட்டுமல்ல அதை எதிர்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு நீங்கள் தனி அல்ல என்பதை தெரியப்படுத்துவதற்காகவும் தான் என தெரிவித்தார்.

சின்மயி காவல் துறையில் புகார் கொடுக்க வேண்டியது தானே, இத்தனை ஆண்டுகள் என்ன செய்தார்?,

திட்டமிட்டு பழிவாங்குகின்றார் என்ற கருத்துகளை வெளியிடும் முன்னர் இதை ஒரு மாநில அளவிலான அரசியலோடு சுருக்காமல் சற்றே பரந்த பார்வையோடு உலகம் முழுதும் இந்தப் பரப்புரைப் பெண்களைப் பேச வைத்ததை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆளுநர் புரோகித் பன்வாரிலால் செய்த லீலைகளை திசை திருப்ப இந்த செய்தி பயன்படும் என்ற வாதத்தில் உண்மை இருப்பினும், ஆளுநரால் பாதிப்படைந்த எண்ணற்ற பெண்கள் இந்த *#metoo* வின் மூலம் பேச ஒரு தளம் ஏற்பட்டிருக்கின்றது என நாம் சிந்திக்க வேண்டும்.

சிறுமியாக இருந்தபோது ஒரு பெண் குழந்தைக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவை அப்போதே வீட்டில் சென்று கூறி, காவல் துறையில் நடவடிக்கை எடுக்கும் சமூகமாக நாம் இருக்கின்றோமா? இல்லையே! பல வருடங்கள் கழித்தும் அந்த வடு அந்தப் பெண்ணின் மனதை அரித்துக்கொண்டிருக்கும் நிலையில் தங்கள் வலிகளைப் பகிர்ந்து கொள்ள இது முக்கியமானது என்பதை உணர வேண்டும். இதை நக்கல் அடிப்பதன் மூலம் நாம் உள்ளிருக்கும் ஆணாதிக்கச் சமூகத்தின் தன்மைகளை வெளியே காண்பிக்கின்றோம் என்பதே உண்மை. கோவையில் மன நல உளவியலராக இருக்கும் திரு. எழில் அருள் அவர்கள் மிகச் சரியாக இந்த *# metoo* பற்றி தன் முகநூலில் எழுதியிருந்தார். அதன் சில வாக்கியங்களை நீங்கள் படிக்கக் கீழே தருகின்றேன்.

“*Emotional instability* இருப்பவர்கள் வாழ்க்கை பாதிப்படையத்தான் செய்கிறதென்பதால் அவர்களும் பேசட்டும். நம்மைப் போன்றுதான் பெரும்பாலோர்க்கு நடந்திருக்கிறது என்பதை உணரும் போது தன்னிடமிருக்கும் *guilt, fear, anxiety* போன்றவற்றிலிருந்து எளிதில் வெளி வர முடியும் என்பதே *##Me too* வின் முக்கிய நோக்கமாய்க் கருதுகிறேன். ”என்கிறார் .

இது தான் இந்தப் பரப்புரையின் முக்கிய நோக்கம். நீங்கள் அரசியல் காரணங்களுக்காக அதை குற்றம் சொல்வது சரியானதாக இருக்க முடியாது. பலர் இதில் வெகுளி ஆண்கள் பாதிப்படைவார்கள் என கண்ணீர் வடிக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன் கேஸ் அடுப்பு வெடித்து எத்துணை பெண்களை நாம் அநியாயமாக இழந்திருப்போம்? ஆனால் அந்த வலிகளைப் பற்றிக் கவலைப் படாமல் *dowry prohibition Act* மூலம் வெகுளி ஆண்கள் பாதிப்படைகின்றார்கள் என கண்ணீர் சிந்திய சமூகம் தானே நாம்? சதவீதத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் துன்பமும் உயிர் இழப்புகளும் அவஸ்தைகளும் இந்த வெற்றுக் கூச்சல் முன் ஒன்றும் இல்லை என்பதை உணராத நடுநிலைவாதிகள் தானே நம் சமூகம்?

மொள்ளமாரித்தனத்தில் இருவரும் விரும்பி ஈடுபட்டால்.. _*We two.*

அதில், ஒருவர் மட்டும் விரும்பி இருந்தால்...


*#metoo..*

அவ்ளோ தான் சார் வாழ்க்கை...

போன்ற வன்மப் பதிவுகள் எல்லாம் *#metoo* பரப்புரையைக் கிண்டல் செய்வதாகத் தெரிந்தாலும் ஆழ் மனதில் பல ஆண்களுக்கு உள்ள பதட்டத்தை காண்பிப்பதாகவே உள்ளது. இனி விளையாட்டிற்கேனும் பெண்களை பாலியல் சீண்டல் செய்யும் முன், யாருக்குத் தெரியப்போகிறது என்ற எண்ணம் இல்லாது தயக்கம் ஏற்படும். அந்த தயக்கமே இந்தப் பரப்புரையின் வெற்றி!

பெண்கள் பேசட்டும்; மனம் திறக்கட்டும்; அய்யோ இந்தச் சமூகத்திற்கு முன் நாம் பதில் சொல்ல வேண்டிவருமோ? என்ற தயக்கங்கள் துறந்து பேசட்டும்! அவர்களின் குரலை எந்த காரணம் கொண்டும் தந்தை பெரியாரின் மண் மிதிக்காது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்! 1920களில் ஆண்மை அழிய வேண்டும் அப்போது தான் பெண்களுக்கு விடுதலை என முழங்கியவர் தந்தை பெரியார். அவரின் பெண் விடுதலை முழக்கங்கள் பார்ப்பனப் பெண்களுக்கும் சேர்த்தே இருந்தது என்பதை அவர்கள் மறந்திருக்கலாம்; நாம் மறக்கலாமா? மனுவின் படி பெண்கள் அனைவரும் பாவ யோனியில் பிறந்தவர்கள் தானே? பஞ்சமர்களுக்கும் கீழானவர்கள் தானே பெண்கள்!?

பொய்யும் புரட்டும் நீண்ட நாட்கள் நிலைபெறாது. ஆகையால் ஒரு பாலியல் தொந்தரவு குரல் ஒலிக்கும் போதே அது பொய்யாக தான்இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு சற்றே பரந்த மனப்பான்மையோடு இந்தப் பரப்புரைக்கு துணை நிற்போம்! ●



சிறுமியாக இருந்தபோது ஒரு பெண் குழந்தைக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவை அப்போதே வீட்டில் சென்று கூறி, காவல் துறையில் நடவடிக்கை எடுக்கும் சமூகமாக நாம் இருக்கின்றோமா? இல்லையே! பல வருடங்கள் கழித்தும் அந்த வடு அந்தப் பெண்ணின் மனதை அரித்துக்கொண்டிருக்கும் நிலையில் தங்கள் வலிகளைப் பகிர்ந்துகொள்ள இது முக்கியமானது என்பதை உணர வேண்டும்.



**— மு.சி.அறிவழகன் —**

# பெண்ணியமும் அரசியலும்

**கேள்வி : இப்போது தமிழ்நாட்டில் பரபரப்பாகப் பேசப்படும் நானும்தான் ஆங்கிலத்தில் ME TOO. இதன் பின்னணியை எப்படிப் புரிந்து கொள்வது?**

பெண்கள் உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு என்று பொதுவான பிரச்சனைகள் சில உள்ளன. அவர்களது சமூகம் சார்ந்து அனுபவிக்கும் மாறுபட்ட பிரச்சனைகளும் உள்ளன. மனித மனம் நற்குணங்களும் வக்கிரங்களும் கலந்து கிடக்கும் ஒரு செயலி. எதை எது அடக்கி வைக்கிறது என்பதைப் பொறுத்தே ஒருவர் எத்தனை விழுக்காடு நல்லவர்கள் என்று சொல்ல முடியும்.

பெரும்பாலான ஆண்கள் தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தனக்கு அருகில் உள்ள ஒரு பெண்ணை வயது, உறவு, நம்பிக்கை என அனைத்தையும் தாண்டி பாலியல் உணர்வுடன் அல்லது வெறியுடன்அணுகுகிறார்கள்.

என்பதும் அவ்வாறு இளம் வயதில் ஆணுடைய சீண்டலுக்கும் வல்லுறவுக்கும் ஆளானவர்கள் தங்கள் உயிர் பிரியும் வரை அதை மறப்பதில்லை என்பதும் உலகம் முழுவதும் உள்ள பெண்கள் வெளிப்படையாகச் சொல்லும் செய்தியாகும். அப்படி ஒப்புக்கொள்ளும் பெண்கள் 48% வெளியே சொல்ல விரும்பாதவர்களையும் சேர்த்து இந்த சதவீதம் உயரலாம்.

ஆண்கள் எத்தனை சதவீதம் பேர் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று இதுவரை சரியானக் கணக்கெடுப்பை யாரும் வெளியிடவில்லை. வெளியிட முடியுமா என்பதை ஆண்களின் மனச்சான்றுக்கு விட்டு விடவேண்டியது தான்.

தனது விருப்பமோ உடன்பாடோ இல்லாமலும் அதற்கு உடன்பட மறுத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு அஞ்சியும் வெளியில் சொன்னால் வரும் ஆபத்துகளை நினைத்தும் தனது உடல்மீது நடக்கும் அத்துமீறலை வெளியில் சொல்லாமல் மறைக்க வேண்டிய சமூக நிலை. ஆனால் அந்த நினைவுகள் பாதிக்கப் பட்டவர்களை விட்டு விலகுவதில்லை. ஏதேதோ நேரத்தில் அந்த நினைவு வந்து அவர்களைத் துன்புறுத்தும். மனதிற்குள் தன்னைப்பற்றி ஒரு தாழ்வுணர்ச்சி தோன்றும். சில நேரங்களில் அது குற்ற உணர்வாக மாறி அந்தப் பெண்ணே தனக்குள் குமைந்து கொண்டிருப்பார். அல்லது மற்றவர்கள் மீது நியாயமற்ற முறையில் அந்த வெறுப்பை வெளிப்படுத்துவார். என்றேனும் யாரிடமேனும் அதைப் பகிர்ந்து கொள்ள முடிந்தால் அவருக்கு ஒரு மனச்சுமை குறையும். அப்படித் தொடங்கப்பட்டதே இந்த "நானும்தான்" என்ற இயக்கம்.

**கேள்வி: இவ்வளவு முக்கியமான பிரச்சனையை ஏன் பெண்கள் இயக்கங்களோ திராவிடர் கழகம் போன்ற சமுதாய இயக்கங்களோ பெரிதாகக் கையில் எடுத்து செயல்படவில்லை?**

இந்த இடத்தில் பெண்கள் இயக்கம் என்று யாரைச் சொல்கிறோம் சமுதாய இயக்கம் என்று எதை அடையாளப்படுத்துகிறோம் என்பது மிக முக்கியம் .

பெண்களுக்காக, பெண்களின் சமத்துவத்திற்காக, சுயமரியாதைக்காக, பொருளாதார உரிமைகளுக்காக, பெண்களை ஒடுக்கும் காரணிகளான மதம் சாதி இனம் நிறம் மொழி கலை இலக்கியம் பண்பாடு பொருளாதார அமைப்பு அனைத்தையும் எதிர்ப்பதுதான் பெண்களுக்கான இயக்கம். இவற்றில் சிலவற்றையாவது முதன்மைப் படுத்தி செயல்படும் இயக்கங்கள் பெண்ணுரிமை அமைப்புகள் ஆகியவை இத்தகைய பாலியல் சீண்டல்களை வன்முறை என்றே கூறுகின்றன. அவை ஆணாதிக்க சமூகத்தின் அடையாளங்கள் என்று கண்டிக்கின்றன.

அவற்றுக்கு எதிராக உடனுக்குடன் போராட்டங்களை நடத்திக் கொண்டே இருக்கின்றன.

**கேள்வி: இதுவும் பெண்கள் பிரச்சனை தானே. இதற்கு முன்னுரிமை கொடுக்கலாமே?**

பெண்களுக்குப் பல சமூகப் பிரச்சனைகள் இருக்கின்றன. அதில் இத்தகைய அத்துமீறல் வன்முறையும் ஒன்று. இதுமட்டுமே பெண்கள் பிரச்சனை என்று பேசுகிறவர்கள் சமூகத்தில் வேறெந்தப் பிரச்சனை பற்றியும் பேசாதவர்கள். பேச மறுப்பவர்கள். ஏன் முடிந்தால் அதற்கு நியாயம் கற்பிக்கும் பழக்கம் கொண்டவர்கள். அவர்கள் தான் இந்தக்குற்றச்சாட்டை உலகப் பெண்களின் ஒரே பிரச்சனை என்ற முறையில் பேசுவார்கள். அவர்களிடம் கேளுங்கள் இதுவரையில் தன்னைத்தவிர எந்தப் பெண்ணின் பாதிப்பிற்காவது அவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்களா என்று.

மேலும் ஒரு பிரச்சனை நடந்தவுடன் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியில் சொல்லப்பட்டால்தான் அதில் இயக்கங்கள் ஒரு நிலைப்பாடு எடுத்துப் பேசவும் போராடவும் முடியும். அப்படி இல்லாமல் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான அல்லது வசதியானச் சூழலில் இப்படிக் குற்றம் சுமத்தும் போது அதன் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதன் உண்மைத் தன்மையையும் அறிந்து கொள்ள முடியாது.

மேலும் அரசியல் பின்னணியிலும் இத்தகைய குற்றச்சாட்டுகளைப் புனைய முடியும் என்பதை மறந்து விட்டு ஒருபக்கக் குற்றச்சாட்டை மட்டுமே நம்பி இயக்கங்கள் செயல்பட முடியாது.

**– நேர்காணல் தொடரும்.**



**வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் – தொடர்**

# குழந்தைகளை வளர்க்காதீர்கள்... வளரவிடுங்கள்!

“புள்ளய வளத்திருக்கா பாரு..”

“வளர்ப்பு சரியில்ல..அதான்...”

“முருங்கைய ஒடிச்சி வளக்கணும்... புள்ளய அடிச்சி வளக்கணும்” - என்பவை போன்ற ஒற்றை வரித் தீர்ப்புகள் இங்கு ஏராளம் உண்டு. ‘புள்ளய பெத்துட்டா மட்டும் போதாது... ஒழுங்கா வளக்கத் தெரியணும்’, ‘புள்ள வளக்குறதுன்னா சும்மாவா...?’ என்னும் அறிவுரைகளும் இங்கு தாராளமாகக் கிடைக்கும். ஒரு குடும்பத்தின் - பெற்றோரின் - பெருமையும், சிறுமையும் குழந்தைகளாலேயே தீர்மானிக்கப்படுவதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள நம்முடையச் சமூகத்தில், குழந்தை வளர்ப்பு என்பது மிகப்பெரிய கடமையாக, ஏன், சுமையாகவே ஆக்கப்பட்டு விட்டது. விளைவு? குருவி தலையில் பனங்காயை வைப்பது போல, குழந்தைகளின் மீது ‘கடமைகள்’ ஏற்றி வைக்கப்படுகின்றன. பெற்றோர்களும் தேவையற்ற மன அழுத்தத்தை உருவாக்கிக் கொள்கின்றனர்.

என்னுடைய பிள்ளைகள் இந்த பிரபலமான பள்ளியில் - கல்லூரியில் படிக்கிறார்கள், நான் முறைத்தால் போதும் அப்படியே விறைத்து நின்று விடுவார்கள், தனி அறை கொடுத்திருக்கிறோம் - அதில் எப்பொழுது பார்த்தாலும் படித்துக் கொண்டேதான் இருப்பார்கள், வெளியில் போய் விளையாட மாட்டார்கள், ஊர்சுற்ற மாட்டார்கள், பன்னாட்டுக் கம்பெனியில் கை நிறைய சம்பளம் வாங்குகிறார்கள், வெளிநாட்டில் இருக்கிறார்கள், நான் கிழித்தக் கோட்டை தாண்ட மாட்டார்கள், தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்பார்கள் - இப்படியெல்லாம் சொல்லிக்கொள்ளக்கூடிய பெற்றோர்கள்தான், குழந்தைகளை வளர்க்கத் தெரிந்தவர்கள், இப்படித்தான் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்ற ‘குழந்தை வளர்ப்பு மதிப்பீடுகள்’ உருவாக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கூடத்தில் பிள்ளையைக் கொண்டு போய் விட்டுவிட்டு, ‘கண்ணு முழிய மட்டும் விட்டுட்டு, உரிச்சி எடுத்துருங்க சார்’ என்று வாத்தியாரிடம் சொல்லிவிட்டுப் போகும் படிக்காத கிராமத்துப் பெற்றோர்களும் சரி, மாநகரங்களில் வாழும் படித்த பெற்றோர்களும் சரி, குழந்தைகளை அடித்தும், அடக்கியும் வளர்ப்பதே சரியானது என்ற முடிவோடு இருப்பதைப் பார்க்க முடிகிறது. விதிவிலக்காக விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையும் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் ஒரு விசயத்தை மறந்துவிடுகிறார்கள்.

தெருவில் குரங்கை வைத்து வித்தை காட்டுவதை பார்த்திருப்போம். வித்தைக்காரன், ஏதோ சொல்லிக்கொண்டே, குச்சியைத் தரையில் தட்டுவான், உடனே குரங்கு ஓடிவந்து அதைத் தாண்டும். இதேபோல் ஒவ்வொரு செய்கைக்கும் குச்சியைத் தட்டிக்கொண்டே இருப்பதைப் பார்க்கலாம். குச்சி கண்ணில் படும்வரை மட்டுமே, குரங்கு ஓடியாடி வித்தைகாட்டும். பெரும்பான்மையான பெற்றோர்கள் குரங்காட்டிகளைப் போலத்தான் நடந்து கொள்கிறார்கள். கேட்டால், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா, குழந்தையிலேயே கண்டிப்புடன் வளர்த்தால்தான் எதிர்காலத்தில் நன்றாக இருப்பார்கள் என்ற பதில்களைத் தயாராக வைத்திருக்கிறார்கள்.

ஒரு படத்தில் வைகைப்புயல் வடிவேலு சொல்வாரே, ‘பில்டிங்கு ஸ்ட்ராங்கு...பேஸ் மட்டம் வீக்கு’ என்று, அப்படித்தான் இருக்கிறது, குழந்தைகளின் எதிர்கால நலனுக்கு என்று சொல்லி, பெற்றோர்கள் போடும் ‘பேஸ்மட்டம்’. குழந்தைகள் என்ன புடலங்காய்களா? கல்லைக் கட்டித் தொங்கவிட்டு, நேராக வளர்ப்பதற்கு! சரி, அப்படியென்றால், வேறு எப்படித்தான் குழந்தைகளை வளர்ப்பது?

குழந்தைகளை வளர்க்காதீர்கள்...வளர விடுங்கள்!

அரசுப் பள்ளியில் ஆசிரியராக உள்ள என்னுடைய தோழி சுடரொளியிடம், ‘நீங்கள் என்ன பணி செய்து கொண்டிருக்கிறீர்கள்?’ என்று கேட்டால், ‘பள்ளியில் குழந்தைகள் கற்றுக்கொள்வதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறேன்’ என்று சொல்லுவார். குழந்தைகளுக்குத் தேவை, நல்ல வழிகாட்டலும், சிறந்த புறச் சூழலும். இவை இரண்டும் இருந்தால் அவர்கள் நன்கு வளர்ந்து வருவார்கள். அந்த வழிகாட்டலையும், புறச்சூழலையும் உருவாக்கித் தரும் வேலையை அல்லது உதவியை நாம் செய்ய வேண்டும். இது பள்ளிக்கூடத்திற்கும் பொருந்தும், வீட்டிற்கும் பொருந்தும், மொத்தத்தில் இந்தச் சமுதாயத்திற்கும் பொருந்தும்.



தோழர் இரா.உமா

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் குழந்தைகளுக்கு உருவாக்கித் தரவேண்டும்? தன் மகனின் ஆசிரியருக்கு, அமெரிக்க அதிபராக இருந்த புகழ்பெற்ற ஆபிரகாம் லிங்கன் எழுதிய கடிதத்தையே பதிலாகத் தர விரும்புகிறேன். நீண்ட கடிதம்தான் என்றாலும், அந்தக் கடிதத்தின் ஒவ்வொரு வரிகளின் முக்கியத்துவம் கருதி அப்படியே கீழே தருகிறேன்.

“அவன் கற்றுக்கொள்ள வேண்டும்.

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்கத் தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும், பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள். புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கு அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய்விடாமல், எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி, நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லையென்றும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். தனது செயல்திறனுக்கும் அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும்.

ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்ட, விடாமல் போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள். அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம்காட்டி சார்ந்திருக்க வைக்க வேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும்தான் பயன் மிக்கதாக மாறுகிறது. தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான். இதில் உங்களுக்குச் சாத்தியமானதை எல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன். எனது அன்பு மகன்.”



வெறும் ஏட்டுப்பாடத்தை மட்டுமன்று, இந்த உலகத்தைப் புரிந்து கொள்ள, சிறந்த மனிதனாக, மனித குலத்தின் மீது நம்பிக்கை கொள்ள அவனுக்குக் கற்றுக் கொடுங்கள் என்பதுதான் இந்தக் கடிதத்தின் சாரம். வகுப்பறைகளின் சூழல் இப்படி அமைந்துவிட்டால், பள்ளிக்கூடங்களில் இருந்து இந்தச் சமூகத்திற்கு ‘மனிதர்களும்’ கிடைப்பார்கள்!

சரி, இதில் பெற்றோர்களின் பங்களிப்பு எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்? இந்தக் கேள்விக்கும் புகழ்பெற்ற ஒரு தலைவர் தன் மகளுக்கு எழுதிய கடிதங்களையே பதிலாகத் தரப் போகிறேன். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நேரு, தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள், உலக சரித்திரத்தை மட்டும் பேசவில்லை. இந்த உலகை எப்படிப் பார்க்க வேண்டும், வாழ்க்கையையும், அது கொண்டு வந்து சேர்க்கும் சிக்கல்களையும் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையையும் நேருவின் கடிதங்கள் விதைக்கின்றன. நைனி சிறையில் இருந்து இந்திராவுக்கு எழுதிய கடிதங்களுள் ஒன்றில், நேரு இப்படிக்கேட்கிறார்,

“ஜோன் ஆப் ஆர்க் என்னும் பெண்ணின் கதையை நீ முதன்முதலில் வாசித்த போது, அதிலே மிகவும் ஈடுபட்டு அவளைப்போல நீயும் ஆகவேண்டும் என்று நினைத்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?”

மற்றொரு கடிதத்தில், “நீ ஆனந்த பவனத்தில் இருக்கிறாய். அம்மா மலாக்கா சிறையில் இருக்கிறாள். நான் நைனி சிறையில் இருக்கிறேன். சில சமயங்களில் இந்தப் பிரிவு துன்பமாயிருக்கிறதல்லவா? ஆனால், நாம் மூவரும் சேரப்போகும் நாளை நினைத்துப்பார்! நான் அந்த நாளை நினைத்துக்கொண்டே, கவலையை மறந்து உள்ளத்தில் களிதளும்ப வாழ்கிறேன்”.

இன்னொன்றில் இப்படிச் சொல்கிறார், “பழங்காலத்தோடு நமக்குள்ள பல தொடர்புகளை நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆனால் பழைய வழக்கம் என்கிற தளை நமது முன்னேற்றத்தைத் தடுக்கும் போதெல்லாம், அதை முன்பின் பாராது அறுத்தெறிய வேண்டும்”.

குழந்தைகள் விழுந்துவிடவே கூடாது என்று, கையை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளாமல், விழுந்தாலும் மீண்டும் எழுவதற்கான நம்பிக்கையை அவர்களிடம் விதைக்க வேண்டும். அதைத்தான் நேரு செய்தார். இந்தியாவின் இரும்புப் பெண்மணியாக இந்திரா சரித்திரத்தில் இடம்பிடித்துக் காட்டினார். மீண்டும் அழுத்தமாகச் சொல்கிறேன்,

“குழந்தைகளை வளர்க்காதீர்கள்...வளரவிடுங்கள்!!” ●



# குழந்தைகளை வெற்றிபெற நினைக்காதீர்கள்..!

“நீங்கள் எப்படி வளர்ந்திருந்தால் நன்றாய் இருக்குமோ, அப்படி உங்கள் குழந்தைகளை வளர்த்தெடுங்கள்", என்கிறது ஒரு பொன்மொழி.

இன்றையச் சமூகச் சூழலில் குழந்தை வளர்ப்பு என்பது சவாலான விசயமாக இருக்கிறது.

குழந்தைகளுக்குத் தனித் தொலைக்காட்சிகள் வந்துவிட்டன, நூல்கள் நிறைய வந்துவிட்டன, இன்னும் பல துறைகளும் குழந்தைகள் மீது கவனம் செலுத்துகிறது.

இதையெல்லாம் தாண்டி திராவிடர் கழகம் குழந்தைகளுக்கு என்றே ஒரு மாநாட்டையம் நடத்தி முடித்திருக்கிறது. பெரியார் பிஞ்சுகள் எனும் பெயரில் செப்டம்பர் 29, 2018 அன்று திண்டுக்கல் நகரில் அது நடைபெற்றது. முழுக்கவும் குழந்தைகளுக்கான மேடையாக அது இருந்தது. நடனம், பாடல், பேச்சு, நாடகம் உள்ளிட்ட பல்வேறு தனித் திறன்களை அவர்கள் வெளிப்படுத்தினர்.

சமூகத்தில் நிகழும் சம்பவங்களை நடித்துக் காட்டியும், அதே மாதிரி பேசிக் காட்டியும் சமூக அவலங்களைப் பிறருக்கு உணர்த்தினர். அறிவியல் கண்காட்சி, வரலாற்று நிகழ்வுகள் எனப் பல்வேறு தளங்களில் அவர்களின் பங்களிப்பை அங்கு காண முடிந்தது.

கடவுள் மறுப்பு, ஜாதி மறுப்பு, மத மறுப்பு, மூடநம்பிக்கை மறுப்பு என மிகக் கனமானக் கொள்கைகளை அவர்கள் ஏற்றுள்ளனர். அதற்கேற்ப இதுவரை பெரியவர்கள் மட்டுமே செய்து வந்த பகுத்தறிவுப் பேரணியைக் குழந்தைகள் செய்தார்கள். சமூகம் "வாய் பிளந்து" பார்த்து மிரண்ட அல்லது பார்த்து மகிழ்ந்த அற்புதமான தருணம் அது.

பெரியார் தம் மக்களுக்குக் கொள்கைகள் சொல்லிக் கொடுத்தார். அதைவிட ஒழுக்கத்தை அதிகம் வலியுறுத்தினார். சக மனிதரை எப்படி மதிப்பது? சக மனிதரிடம் எப்படி நடந்து கொள்வது? ஒரு மேன்மையான வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதுதான் பெரியாரிசம். அதை வளர்க்கும் விதமாகவும் மாநாட்டில் நிறைய அம்சங்களைக் காண முடிந்தது. கீழ்க்கண்ட கேள்விகள் குழந்தைகளிடம் கேட்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டன.

*1) நீங்கள் எந்த இயக்கத்தில் இருக்கிறீர்கள்?*

*2) உங்கள் கொள்கை என்ன?*

*3) கடவுள் இல்லை என எதற்காகக் கூறுகிறீர்கள்?*

*4) நீங்கள் எந்த மதம்? மதத்தில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா?*

*5) உங்கள் ஜாதியை யாராவது கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்? ஜாதி குறித்த உங்கள் கருத்து என்ன?*

*6) பெரியார் என்பவர் யார்?*



தோழர் **வி.சி.வில்வம்**



7) பெரியாரை உங்களுக்கு ஏன் பிடிக்கும்?

8) நீங்கள் சாமி கும்பிட மாட்டீர்கள் என்பது உங்கள் பள்ளி நண்பர்களுக்குத் தெரியுமா? அவர்கள் காரணம் கேட்டால் என்ன சொல்வீர்கள்?

9) "நான் பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவன்" என்பதை யாரெல்லாம் தைரியமாகச் சொல்வீர்கள்?

10) நீங்கள் பெரியார் கொள்கையில் இருப்பதால் உங்களுக்கு ஏற்பட்ட சங்கடங்கள் என்ன?

11) நீங்கள் பெரியார் கொள்கையில் இருப்பதால் உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியான தருணங்கள் என்ன?

12) உங்களின் சிந்தனை ஆற்றல் வளர, உங்கள் பெற்றோரின் பங்கு என்ன?

13) "பெற்றோர் எப்படி இருந்தால் நன்றாய் இருக்கும்" என்கிற எதிர்பார்ப்புகள் ஏதேனும் உள்ளதா?

14) தயக்கம், வெட்கம், கூச்சம் மிகுந்தவர்கள் இங்கு எத்தனை பேர் இருக்கிறீர்கள்?

15) இயக்க நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கு பெறுபவர்கள் யார்? யார்?

16) எங்களைப் போன்ற பெரியவர்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?

17) நாங்கள் பேசுகிற கொள்கைகளை, உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா அல்லது வேறு எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?

18) கடவுள் இல்லை என்று சொல்ல உங்களில் எத்தனைப் பேருக்கு பயம்?

19) உங்களைப் போன்ற நூற்றுக்கணக்கான குழந்தைகள் இங்கு வந்திருக்கிறார்களே, அதுகுறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இதேபோல பெற்றோர்களுக்கும் சில விசயங்கள் முன்வைக்கப்பட்டன. பிழைகள் இரண்டு பக்கமும் இருப்பதாகவே இங்கு கருதப்படுகிறது.

- குழந்தைகள் நிறைய செயல்பட, நாம் குறைவாய் பேச வேண்டும்.
- எதையும் அறிவுரையாக இல்லாமல், உரையாடலாகப் பேசுவோம்.
- நாம் சொல்வது எதுவுமே எடுபடவில்லை என்றால், அணுகுமுறையை மாற்றுவோம்.
- சில நேரங்களில் கோபமாகப் பேச நேர்ந்தால், கூடவே லேசான புன்னகையும் இருக்கட்டும்.
- குழந்தைகளைப் பாராட்டுவோம். அது அவர்கள் வெற்றி பெற மேலும் உதவும்.
- மனம் விட்டுப் பேசுவோம். வெளிப்படைத் தன்மை குழந்தைகளுடனான நெருக்கத்தை அதிகரிக்கும்.
- குழந்தைகளுக்குப் பாடம் எடுப்பதைத் தவிர்ப்போம். நாம் சொல்வதைக் கேட்பவரல்ல அவர். நம்மோடு சேர்ந்து வாழ்பவர்.
- குழந்தைகளிடம் நாம் வெற்றி பெற நினைப்பதே பல பிரச்சினைகளுக்குக் காரணம்.
- வணக்கம் சொல்வதை, நன்றி தெரிவிப்பதை, மன்னிப்புக் கேட்பதை நாம் தொடங்கி வைப்போம். அவர்கள் பின்பற்றுவார்கள்.
- குழந்தைகள் அடம் பிடிக்கும் போது, நாம் பொறுமை காப்போம். நாம் மட்டும் அடம் பிடிக்கவே கூடாது.
- வீட்டில் நடக்கும் சிறு, சிறு செயல் திட்டத்திற்கு அவர்களைத் தலைமை ஏற்க சொல்லுங்கள் (Project Manager).
- நம் குழந்தைகளை நாம் புரிந்து கொள்வோம். சக மனிதர்களை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.
- நாம் ஏன் தனித்துவமாய் வாழ வேண்டும் என்பதை உணர்த்துவோம். அதற்குப் பெரியார் எப்படி உதவுகிறார் என்பதைத் தெரிவிப்போம்.
- உணர்ச்சிவசப்படுவதும், கோபப்படுவதும் ஒரு கொள்கையாளருக்கு இருக்கவே கூடாத விசயங்கள் என்பதைச் சொல்லுவோம்.
- மற்ற குழந்தைகள் போல சராசரி வாழ்க்கைக்கு ஏங்கினால், அதற்கு மாற்று வழி காண்போம்.
- தீபாவளிக்கு முந்தைய வாரம் புத்தாடை எடுத்து, பலகாரம் செய்து கொடுப்போம். சராசரி கொண்டாட்டங்கள் அவர்களைப் பாதிக்காது.
- தொலைக்காட்சி நேரத்தை வெகுவாகக் குறைத்து, உள்ளூரிலேயே குடும்பத்துடன் ஊர் சுற்றுவோம்.
- அவர்களுடன் தரையில் அமர்ந்து, விழுந்து புரண்டு, ஓடியாடி மகிழ்ந்திடுவோம். பிரியங்கள் அதிகரிக்கும் வழிகள் இவை.

- தினமும் ஒரு மணி நேரம் நம்மிடமும் ஒரு புத்தகம், அவர்களிடமும் ஒரு புத்தகம் இருக்கட்டும்.
- மேற்கூறிய எல்லாமும் செய்துவிட்டோமே என நாம் நினைத்தால், புதிய வழிகளைக் கண்டுபிடிப்போம்.

ஏனெனில் நாம் எப்படி வளர்ந்திருந்தால் நன்றாய் இருக்குமோ, அதைவிட சிறப்பாக நம் குழந்தைகளை உருவாக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இந்த அம்சங்கள் அங்கு வரையறுக்கப்பட்டிருந்தன.

குழந்தைகள் வளர்ப்பில் இரண்டு விசயங்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.



ஒன்று, குழந்தைகள் நன்கு படிக்க வேண்டும், சிறந்த வேலை கிடைக்க வேண்டும், குறிப்பாக நிறைய சம்பாதிக்க வேண்டும் என்கிற கனவு. மற்றொன்று நல்ல பழக்கத்துடன், சிறந்த பெயர் எடுப்பது. இந்த இரண்டு லட்சியம் தான் பெற்றோர்களுக்கு!

சரி! குழந்தைகள் வளர்ப்பில் பெற்றோர் நினைப்பது எல்லாமே சாத்தியமா? சாத்தியமே இல்லை. அதுவும் இன்றையச் சூழலில் அது மிக, மிகக் குறைவு. பெற்றோர்கள் ஒரு விசயம் குறித்து ஒரு மடங்கு சொன்னால், சமூகம் பத்து மடங்கு சொல்லிக் கொடுக்கிறது. எது சரி? எது தவறு? என்பதைத் தீர்மானிக்க முடியாத குழந்தைகள், எது நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்கிற அடிப்படையில் பின்பற்றத் தொடங்குகிறார்கள். ஒருவேளை இந்த முடிவில் பிரச்சினைகள் ஏற்பட்டால், அதை சரிசெய்யும் சிறந்த அணுகுமுறைகளைப் பெற்றோர்கள் கையாள வேண்டும்.

இது தொடர்பாக எனக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தைக் கூட இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

தொடக்கத்தில் குழந்தையை நான் அடித்திருக்கிறேன். என் மீது குழந்தைக்குப் பயம் வந்ததே தவிர, பிரச்சினைத் தீரவில்லை. மேலும் குழந்தைக்கு அடி பழகிப் போயிருந்தது.

அப்போதைய மன உளைச்சலில் தீவிர கவலை கொண்டேன். மாற்று வேண்டும் என யோசித்தேன். அந்த மாற்றம் எனக்கு வேண்டும் என முடிவெடுத்திருந்தேன்!

மனிதருக்குத் தேவையான குணங்கள் என்பதின் பட்டியல் பெரியது. அதை அனைத்தையும் சுருக்கினால், ஒன்றே ஒன்று மட்டும் மனிதருக்குப் போதுமானதாய் தெரிந்தது.

அது பொறுமை!

பொறுமை இருந்தால் கோபம் வராது, கோபம் இல்லாத போது பிரச்சினையை எளிதாக அணுகலாம். அந்த முயற்சியில் இறங்கினேன். அப்போது குழந்தைக்கு வயது 5.

குழந்தை சேட்டை செய்கிறது, நமக்குக் கோபம் வருகிறது. இரண்டும் ஒன்றாகிற போது பாதிப்புப் பெரிதாகிறது. ஆக இது தீர்வு அல்ல என்கிற முடிவுக்கு வருகிறேன். நாம் அடித்தும் குழந்தை கேட்கவில்லையா? என்கிற தவறான என் அகங்காரத்தை உணர்கிறேன்!

பிறகு நான் மாறுகிறேன். குழந்தையை ஒரு மனிதராக மதிக்கத் தொடங்குகிறேன்! குழந்தைத் தொடர்பான அனைத்தையும் அதனிடமே கேட்டுச் செய்கிறேன். ஊருக்குப் போவதாக இருந்தால் கூட, முன் தினமே பயணத் திட்டத்தைக் கூறி அனுமதி பெறுகிறேன்!

ஒவ்வொன்றையும் கேட்டுச் செய்கிற போது, குழந்தை மதிக்கப்படுகிறது! என்னைக் கேட்டுத்தான் அப்பா செய்வார்கள் எனக் குழந்தை பெருமைப்படத் தொடங்குகிறது!

இப்படியான தொடர் வாழ்வில் எங்களுக்குள் ஓர் புரிதல் வந்தது! பிரச்சினைகள் குறைந்தது.

அதற்கு மேலும் ஒரு முக்கியக் காரணம், குழந்தைக்கும் நமக்குமான பிரச்சினையில் யார் ஜெயிப்பது என்கிற எண்ணத்தை ஒழித்தது தான்! இங்கு சூழகம் தான் தீர்வே தவிர, வெற்றியல்ல!

இப்போது மகளுக்கு வயது 11.

சென்ற மாதம் 30 பேருக்கு எங்கள் வீட்டில் ஒரு விருந்து நடந்தது. அதை ஒரு "Project" என்ற அடிப்படையில் மகளிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தோம்!

விருந்தினர்களுக்கு அழைப்புக் கொடுத்தது, உணவு வகைகளைத் தேர்வு செய்தது, வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்றது, அவர்களைக் கவனித்துக் கொண்டது என நான் 30 வயதில் செய்ததை, அவர் 11 வயதில் தொடங்கி இருந்தார், பாராட்டுகள்!

மனிதர்களை மதிக்க வேண்டும் என எல்லோரும் சொல்வார்கள். ஆனால் அதில் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்பதைத் தாமதமாகப் புரிந்து கொண்டேன்.

ஆக ஒவ்வொரு அனுபவத்தில் இருந்து நாம் கற்றுக் கொண்டுதான், குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது. அதேநேரம் கொள்கை சார்ந்த குழந்தைகள் சமூகத்தில் வெற்றி பெறுவது மிக, மிக முக்கியமாகிறது. ஏனெனில் அந்த வெற்றியில் தான் கொள்கை வெற்றியும் அடங்கியிருக்கிறது. ●

# 11வது கட்டளை

ஷாலின்



இந்திய கிறிஸ்தவர்களிடையே ஒரு விஷயம் ஒரு நூற்றாண்டு காலமாக பழக்கத்தில் இருக்கிறது.

அதாவது, வீட்டில் ஆணோ பெண்ணோ காதல் என்று வந்து சொன்னால் உடனே அவர்கள் எடுக்கும் அஸ்திரத்தின் பெயர் "கீழ்ப்படிதல்".

காதல் என்றாலே பெரும்பாலான வசதி படைத்த கிறிஸ்தவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் எரிச்சலை ஏற்படுத்துகிறது. காதல் என்றால் ஏதோ இயற்கைக்கு ஒவ்வாத ஒரு விஷயம் போல் அவர்களில் முகம் நெளியும். இங்கே ஜாதி, வசதி, தகுதி இதெல்லாம் இரண்டாம் பட்சம்தான். அவர்களை பொறுத்தவரையில் காதல் என்றாலே அருவருப்பான ஒரு விஷயம். இதில் காமம் எல்லாம் கடவுளுக்கு எதிரான விஷயம் போல நடந்து கொள்ளுவார்கள். இதில் பல பேர் காமம், செக்ஸ் என்பதெல்லாம் வெறும் பிள்ளை பெறும் தொழில்நுட்பமாகவே கருதி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒருவர் காதலிக்கிறார் என்று சொன்னவுடன் "கடவுளுக்குப் பயப்படுமா, நீ பண்ணுறது தப்பு, எங்க பேச்ச கேளு, கீழ்படியிற பிள்ளைகள தான் கடவுள் ரட்சிப்பாரு, நாங்க பாத்து வைக்குற பையன கட்டிக்கோ" என்று பிளாக் மெயில் செய்ய ஆரம்பிப்பார்கள்.

கடவுளுக்கு கீழ்படி, பெற்றவர்களுக்கு கீழ்படி, சர்ச் பாதருக்கு கீழ்படி..... இப்படி படிப்படியாக அவர்கள் தனித்தன்மையை நசுக்குவார்கள்.



நான் கேட்கிறேன், நான் ஏன் கடவுளுக்கு பயப்படவேண்டும்? நான் என்ன திருடனா உங்கள் கடவுள் என்ன போலீஸா? பயம் எப்படி பக்தியாகும்?

ஒரு ஆண் ஒரு பெண் மேல் வைத்திருக்கும் கட்டுக்கடங்காத அன்பு போல தானே பக்தி?

காதல், அன்பு இது தானே பக்தி?

கிறிஸ்தவர்களே, கடவுளுக்குப் பயப்படு என்று உங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்காதீர்கள். மாறாக கடவுளை நேசி என்று வேண்டுமாயின் சொல்லிக் கொடுங்கள். ஒருவருக்கு பயந்து நான் ஒழுக்கமாயிருப்பது கேவலத்தினும் கேவலம், ஒருவர் பால் கொண்ட அன்பால் நான் அவருக்கு வலிகொடுக்காமல் இருக்க தவறு செய்யாதிருத்தல் மேன்மையிலும் மேன்மை.

அதுவும் இல்லாமல், எந்த கடவுள் உன்னை காதலிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கிறார்? காதல், காமம் இரண்டையும் கரைபுரண்டோட வைக்கும் ஹார்மோன்களை உன் உடலில் வைத்திருக்கும் கடவுள் என்ன முட்டாளா?

உலகத்தில் உள்ள 90 சதவிகித கிறிஸ்தவர்கள் காதல் திருமணம் தான் செய்து கொள்கிறார்கள். இந்திய கிறிஸ்தவர்கள் மட்டும் தான் இன்னும் இந்த இயற்கைக்கு மாறான கூட்டி கொடுக்கும் வேலையான வரன் பார்த்து செய்யும் திருமணங்களை (arranged Marriage) நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் பக்தி பழங்களாக ஊரை ஏமாற்றி கொண்டிருக்கும் arranged Marriage செய்த கிறிஸ்தவ தற்குறிகள் காதலித்து திருமணம் செய்பவர்களை ஏதோ பாவம் செய்தவர்கள் போல் இழிவாகப் பார்க்கும் பேசும்.

உண்மை என்னவென்றால், தனக்கான ஒரு துணையை தேடி கொள்ள துப்பிலாத, biologically incapable ஜீவராசிகளான அவைகளைதான் நாம் எல்லோரும் கேவலமாகப் பார்க்க வேண்டும்.

எந்த மதத்திலும் இல்லாத ஒரு அழகு கிறிஸ்தவத்திற்கு உண்டு. அதன் புனித நூல் என்று சொல்லப்படும் பைபிளில் மட்டும்தான் "லவ்" என்கிற வார்த்தை 551 தடவை வருகிறது.

அன்பு, பாசம், நேசம் என்று நீங்கள் அந்த வார்த்தைக்கு ஆயிரம் அர்த்தம் சொன்னாலும். தோற்றம், வசதி, படிப்பு, மொழி, ஜாதி, இனம் போன்றவற்றைத் தாண்டி ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் காதலைத்தான் அது தீர்க்கமாகக் குறிப்பிடுகிறது. இதில் பெற்றோரின் கட்டளையைத் தாண்டி வரும் அன்பும் அடங்கும்.

தோழர் ஏசு தனக்கு எந்த உறவுமில்லாத மக்களுக்காக அரசாங்கத்திடம் கேள்வி கேட்டு அவர்களுக்காக உயிர்விட்டு உனக்கு என்ன சொல்லி கொடுத்து சென்றிருக்கிறார் என்பதை உணருங்கள் அற்ப விசுவாசிகளே.

உன் பெற்றோர் சொல்லி ஒருவர் மீது உனக்கு வரும் காதலுக்கு பெயர் வேறு. நீயாய் பார்த்து உணர்ந்து உனக்கு சம்பந்தமே இல்லாமல் இருக்கும் ஒருவரின் மீது பொழியும் காதல் கடவுளை விட பெரிது. ●

ஜோதிடம் என்பது உண்மைதானா? அதை நாம் முழுக்க முழுக்க நம்பலாமா? இது எல்லோர் மனதிலும் இருக்கும் ஓர் அடிப்படையான கேள்விதான். ஆனால், ஜோதிடத்தை நம்புகிறவர்களுக்கு கூடுதலான சந்தேகமாக இருக்கும், இது ஜோதிடத்தை நம்பாதவர்களுக்கு சாதகமாக இருக்கும். இன்னும் சொல்லவேண்டுமானால் நகைச்சுவையாக இருக்கும் என்றும் சொல்லலாம்!

“டேய் மணி நேரமே சரி இல்ல டா தொட்ட காரியம் ஒண்ணும் நடக்க மாட்டனுது...”

“ஜோசியரப் போய் பாருங்க அண்ணே..!”

“அவர்ட்ட போனா பரிகாரம் அது இதுன்னு பணத்த வாங்கிட்டு ஏதோ ஒண்ண சொல்லி குடுத்து அனுப்பிடுறாரு...”

“அண்ணே! எனக்கு தெரிஞ்ச ஒரு ஜோதிடர் இருக்காரு...”

“சொல்லறது நடக்குமா டா ..!”

“அண்ணே, அவர் சொன்னா சொன்னபடி அப்படியே நடக்கும், நல்லதோ கெட்டதோ எதையும் மறைக்காம முஞ்சில அடிச்ச மாதிரி சொல்லுவாரு...”

“டேய் மணி எவ்வளவு காசு ஆனாலும் பரவாயில்லை அவர போய் பார்க்கணும் ஏற்பாடு பண்ணு டா ...”

... ...

இப்படியாக, இவர்கள் விவாதிக்கும் போது ஜோதிடம் என்பது பொய் என்பதனை எடுதுரைக்கின்றனர் நம்பிக்கை இல்லாதவர்கள்...

“ஜோதிடம் என்பதெல்லாம் ஏமாற்று வேலை. உழைக்காமலே மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கச் சிலர் செய்யும் ஒரு தொழில் என்பது சிலரது கருத்து. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, ஜோதிடம் என்பது வேதகாலம் தொட்டு காலம் காலமாக இருந்து வரும் ஒரு ஆருட முறை. அதைப் பார்த்து அதன்படி நடப்பதில் தவறொன்றுமில்லை” என்பது சிலரது கருத்து.

சரி, ஜோதிடம் என்றால் என்ன? அது உண்மைதானா? அது மனித வாழ்வுக்கு உண்மையிலேயே அவசியம்தானா? அதனால், நன்மைகள் ஏதேனும் கிடைக்கின்றதா? இல்லை தீமைகள் மட்டுமே கிடைக்கின்றதா என்பதனை நம் சிந்தனைக்குக் கொண்டு செல்வோம்.

பொதுவாக நா(ரு)ம் மக்கள் அதிகம் பார்க்கும் ஜோதிடங்கள்

1) கைரேகை ஜோதிடம்

2) கிளி ஜோதிடம்

3) எண்கணித ஜோதிடம்

4) பிரசன்ன ஜோதிடம்

5) முகக்குறி பார்த்தும் பலன் சொல்லுதல்

6) மூச்சு ஜோதிடம்

7) பிரமிடு ஜோதிடம்

8) கோடங்கி ஜோதிடம்

இவ்வாறு ஜோதிடமானது மக்கள் மத்தியில் அதிக அளவு பரவிக் காணப்படுகிறது என்பது நிதர்சனமான உண்மை.




மேலே குறிப்பிட்ட ஜோதிட முறைகளால் நமக்கும், பிறருக்கும் எவ்வகையான பயன்கள் பலன்கள் கிடைக்கும் என்பதனைச் சிந்திக்க வேண்டும். காரணம் சிந்திக்கும் தன்மை தான் பகுத்தறிவு, அப்படிச் சிந்தித்தால் தான் அந்த ஜோதிடத்தில் பலன் இருக்கிறதா இல்லையா என்பதனை நம்மால் உணரமுடியும்! நம்முடைய பகுத்தறியும் தன்மையினை கொண்டு பகுத்தாய்வோம்!

நான் பார்த்த ஒரு தொலைக்காட்சி விளம்பரத்தில் ஒரு ஜோதிடரின் செயலைக் குறிப்பிட்டுக் காட்டி இருந்தார்கள்..!

(நீண்ட நாட்களுக்கு முன் பார்த்திருக்க வாய்ப்பு இருக்கிறது ...)

இவ்வாறு ...

“மந்திரிக்கும் சாமியார் ஒருவர் விவசாயத்தில் புதுசு புதுசான முறைகளையும், விவசாயத்தில் இலாபத்தினையும் விளைச்சலையும் அதிகரிக்க” அறிவுரை கூறுகிறாராம்.!

என்ற செய்தி கேட்டு மக்கள் கூட்டம் அந்தச் சாமியாரிடம் அலை மோதியதாம்.! திடீரென அப்போது அந்த மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. அந்தக் குழப்பத்திற்குக்

மு.சி.அறிவழகன்

காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்தபோது, அவருக்குத் தேவையான தகவல்களை தினந்தோன்றும் விவசாயம் சம்மந்தப்பட்ட கால் சென்டரில் *(Call center)* -ல் இருந்து பெற்று - மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தது தெரிய வந்ததாம்.

மக்கள் அந்த ஜோதிடர் மீது எவ்வளவு நம்பிக்கை கொண்டு இருந்தார்களோ அந்த நம்பிக்கை அனைத்தும் பூஜியமானது அவரின் உண்மைத்தன்மை தெரிந்ததால்... ஜோதிடம் என்பது எல்லாம் மூடநம்பிக்கை என எடுத்துக் காட்டியது இந்த விளம்பரம்.

*"Astronomy"* என்ற வானவியலையும், *"Astrology"* என்ற ஜோதிடத்தையும், பால் வேறு தண்ணீர் வேறு என்று பிரித்துப் பார்க்கத் தெரியாத நிலையில் படித்தவர்கள் முதல் படிக்காதவர்கள் வரை இருப்பது வெட்கக்கேடான ஒன்றாகும்.

அதுபோல,

(இது, உண்மை சம்பவம் பெயர் மட்டும் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது)

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த என்னுடைய தோழி கலையரசி அவர்களின் வீட்டுக்கு அப்பாவின் நண்பரும் ஜோதிடருமான ஒருவர் வந்திருக்கிறார். (அந்தக் காலகட்டத்தில் என்னுடைய தோழி கலையரசி 12-ஆம் வகுப்பு பொது தேர்வு முடித்து தேர்வு முடிவுகளுக்குக் காத்திருந்தார்). அந்த ஜோதிடர் கலையரசியின் அப்பாவிடம் பேசிக் கொண்டு இருக்கும் போது, அவர் சொல்கிறார், நான் வரும் வழியில் ஒரு பெண்ணின் மதிப்பெண்ணைக் கணித்து சொல்லிவிட்டு வர தாமதம் ஆகிவிட்டது என்று, கலையரசியின் அப்பா என்னுடைய மகளும் 12-ஆம் வகுப்பு பொது தேர்வு முடிவுக்காக *(Result)* காத்திருக்கிறார் என்றதும் ஜோதிடர் சொல்லிருக்கிறார், உங்கள் மகளின் ஜாதகத்தைக் கொடுங்கள், நான் பார்த்துச் சொல்கிறேன் என்று. சரி என்று கலையரசியின் அப்பாவும் ஜாதகத்தைக் கொடுக்க, ஜோதிடரும் கணித்துச் சொன்னாராம்.

கவலைப்படாதீர்கள் உங்கள் மகள் தேர்வில் அனைத்து பாடத்திலும் தேர்ச்சி *(Pass)* பெறுவார்; ஆனால், குறைந்த மதிப்பெண் தான் கிடைக்கும் என்கிறார், கலையரசியின் அப்பா வருத்தத்துடன் ஜோதிடரிடம் நீங்கள் இதற்கு முன்பு பார்த்த பெண்ணுக்கு எவ்வளவு மதிப்பெண் வரும் என்றார். ஜோதிடர் சொல்கிறார் அவர் மாநில அளவில் மதிப்பெண் *(State Result)* எடுப்பார் என்கிறார். ஆனால், கலையரசி கவலை கொள்ளாமல் இயல்பாக இருந்தார். சில நாட்கள் போயின. *Result*-ஐ பார்க்கிறார். ஆனால், தன்னுடைய தேர்வு முடிவை பெற்றோருக்குச் சொல்லாமல் மவுனம் காக்கிறார் கலையரசி....

கலையரசியின் பெற்றோர் கலையரசிக்கு ஆறுதல் சொன்னார்கள். கலையரசி அப்பாவிடம் சொல்கிறார், அப்பா ஜோதிடர் அன்று ஒரு பெண் மாநில அளவில் மதிப்பெண் எடுப்பார் என்று சொன்னார்கள் அல்லவா அந்த பெண்ணின் மதிப்பெண் எவ்வளவு என்று தெரியுமா என்கிறார்... சரி ம்மா நான் விசாரிக்கிறேன் என்று அக்கம் பக்கம் விசாரித்து அவர் குறைவான மதிப்பெண் எடுத்து இருக்காங்க ம்மா, உன்னுடைய மதிப்பெண் எவ்வளவு என்று கேட்க, அப்பா, நான் நம்முடைய மாவட்டத்தின் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளேன் என்றார்.



இந்தத் தகவல் குறிப்பிட ஜோதிடருக்குத் தெரிந்தது. அவர் என்ன பதில் சொல்லி இருப்பார் என்று நினைக்கிறீர்கள்... "வாழ்த்துகள்" என்று சொல்லிவிட்டு இடத்தைக் காலி செய்தார். இப்போது புரிகிறதா,

இதேபோல்.

என்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஓர் சம்பவம். நானும் என்னுடன் கல்லூரியில் படித்த மாணவனும் மாமல்லபுரம் கடற்கரைக்குச் சென்று இருந்தோம். கடற்கரையை எல்லாம் சுற்றிப்பார்த்து விட்டு கலங்கரை விளக்கைப் பார்க்கலாம் என்று நினைத்து மலையின் மேல் ஏறினோம். மலையின் மேல் ஏறும் வழியில் ஒரு குறிசொல்லும் பெண் ஒருவர் இருந்தார். நான் அவரை ஏறும்போதே பார்த்துவிட்டேன். ஆனால், நான் பார்க்காதது போல தொடர்ந்து ஏறிக்கொண்டு இருந்தேன். அப்போது அந்தப் பெண் என்னுடன் வந்த கல்லூரி மாணவனையும் என்னையும் நோக்கி, "வாங்க பா 10 ரூபா தா, குறிபாத்து சொல்லுறேன்"னு சொன்னார். நான் சொன்னேன், "எனக்கு அதன் மேல் நம்பிக்கை இல்லை, நீ வேணுன்னா பாத்துக்க" என்றேன். அவனும் போய்ப் பார்த்தான்.

தம்பி உனக்கு 18 வயசு வரை ஓர் கண்டம் இருந்தது, அது இப்போ இல்ல. ஆனா 21 வயசு வரை பெண்களால் உனக்கு பிரச்சனை வரலாம்... அப்படின்னு சொன்னார். அந்த குறி சொல்லும் பெண்ணிடம் அவனும் எல்லாத்துக்கும் தலையை ஆட்டினான். நான் அந்தப் பெண்ணிடம் சொன்னேன், சரி அவன் இந்த *Semester* - இல் எவ்வளவு மதிப்பெண் எடுப்பான் என்று கேட்டேன். அந்த பெண் சொன்னார் எல்லாத்திலும் *Pass* பண்ணுவான் நல்ல *Mark* எடுப்பான் என்றார். அடுத்த நொடி என்னைப் பார்த்து உன்னிடம் நிறைய பெண்கள் பேசுவார்கள், பழகுவார்கள் வா பா உனக்கும் குறிபாக்குறேன்'னு சொல்லுச்சி. இல்லை பரவா இல்லைனு நா கிளம்பிவிட்டேன், சமீபத்தில் *Result*-ம் வந்தது. ஆனா,அந்த மாணவன் 4 பாடத்தில் தோல்வி! இதில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது மூட நம்பிக்கை மோசமானது. வாழ்க்கையை மிகவும் பாதிக்கும் இந்த ஜோதிடம் மூட நம்பிக்கையே..!

## ஜோதிடருக்கு ஒரு சந்தேகம்

நான் பேருந்துக்காக ஊரில் காத்து இருந்தேன். அப்போது இரண்டு கிளி ஜோதிடர்கள் வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் என்னிடத்தில் வந்து எங்கள் ஊருக்கு அடுத்த ஊர் பெயரை சொல்லி அந்த ஊருக்கு எப்படி போகணும்னு கேட்க.

நா கொஞ்சம் கூட யோசிக்காம நீங்கள் என்னுடைய எதிர்காலத்தையே சொல்லுறீங்க. பக்கத்துல இருக்க ஊருக்கு எப்படி போகணும்னு உங்களுக்குத் தெரியாதான்னு கேட்க... அவங்க பதில் சொல்லாம ஓடிட்டாங்க. கேள்விகள் எழுமானால் ஜோதிடம் என்பது பொய் என்பது புரியவரும் !

இந்தக் கேள்விகளை நம் சொந்த புத்திக்குக் கொண்டு செல்வோம்...

*1. இந்தியாவைத் தவிர வேறு எந்த சோஷயலிச நாட்டிலாவது ஜோதிடம் உண்டா!*

*2. குரங்குக்கும் கைரேகை உள்ளதே! ஜோதிடம் உண்டா?*

*மடியட்டும் மூடநம்பிக்கை..! மலரட்டும் பகுத்தறிவு..!* ●



# குப்பைக்காரன்

குப்பைக்கா(ரி)ரன் உண்மையில் இந்தப் பெயர் யாருக்குப் பொருந்தும்? துப்புரவுப் பணியாளருக்கா? இல்லை, வீட்டை, தெருவை, ஊரை, நாட்டை குப்பைக் காடாக்கும் நபர்களுக்கா? நாட்டைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை, நமது மக்கள், அதாவது குப்பை போடும் குப்பைக்காரர்கள் நடத்தும், நடந்து கொள்ளும் விதமும், எவ்வாறு உள்ளது?

நான் வாங்கும் தினசரி நாளிதழ்களைச் சேமித்து வைத்து நான் வசிக்கும் பகுதியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளருக்கு கொடுக்கும் பழக்கமுண்டு. அதேபோல் காலையில் காலை உணவு உண்ணும் வேளையில் அவர்கள், எங்கள் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டால் (இந்தப்பகுதியில் கணவன் மனைவி இருவரும் ஒன்றாக வேலை செய்வார்கள்) அவர்களைச் சாப்பிட வாருங்கள் என்று முதன்முறை அழைத்தபோது வந்து வாசலுக்கு வெளியே நின்றார்கள். உள்ளே அழைத்தும் தயங்கினார்கள். அழுக்குப் படிந்த சீருடை அணிந்துள்ளதால் தயங்கினார்கள். எந்தத் தயக்கமும் வேண்டாம் உள்ளே வாருங்கள் என மீண்டும் அழைத்தபோது உள்ளே வந்தார்கள். வீட்டினுள் அமரவைத்து சுடச்சுட தோசை, முட்டைதோசை செய்து பரிமாறினோம். இதுபோன்ற விசயங்களில் எனது துணைவியாரும் ஒத்தக்கருத்துடைய நபர்தான் ஆகவே அவரும் உதவி செய்வார். அவர்களுடன் பக்கத்தில் அமர்ந்துக்கொண்டு அவர்களைப்பற்றியும், குடும்பத்தைப் பற்றியும், அவர்களின் குழந்தைகளைப்பற்றியும், அவர்கள் என்ன படிக்கிறார்கள், எங்கு இருக்கிறார்கள் என நலம் விசாரித்துக்கொண்டே பரிமாறுவார். நான் தோசை ஊற்றித்தருவேன். சில நேரங்களில் அவர்களிடம் எனது துணைவியார் பேசிக்கொண்டே இருப்பார், அப்போது நான் கூறுவதுண்டு ''முதலில் அவர்களைச் சாப்பிடவிடு அவர்கள் சாப்பிட்டப் பிறகு பேசுவோம் என்றவுடன்'' அவரும், ''ஆமாம் இல்ல, ''நானும் பேசிக்கிட்டே இருக்கேன்'' நீங்கள் நன்றாக சாப்பிடுங்கள் என்பார். அவர்களும் சாப்பிட்டு முடித்து சிறிது நேரம் பேசிவிட்டு உடனே கிளம்பிவிடுவார்கள். காரணம் குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட இடத்தை சுத்தம் செய்ய வேண்டும். அதன் பிறகு அடுத்தடுத்த வேலை உள்ளது, என்று கிளம்பி விடுவார்கள்.

அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது பல விசயம் நமக்கு வருத்தம் அளிக்கக் கூடியதாக இருந்தது. உதாரணமாக, அவர்கள் சொன்னது:- நாங்கள் தெருவில் வண்டியை தள்ளிக்கொண்டு வரும்போது விசிலை ஊதிக்கொண்டே வருவோம். சத்தம் கேட்டு பலர் தங்களின் குப்பைகளை எடுத்துக்கொண்டு வருவார்கள். நாங்கள் வாங்கிக்கொள்வோம். சிலர் வண்டியிலே போடுவார்கள். ஒரு சிலர் அவர்கள் வீட்டுக் குப்பையை விட்டுக்கு வெளியில் வைத்துவிட்டுச் சென்றிருப்பார்கள் அதை எடுத்துக்கொள்வோம். ஒரு சில வீட்டிலிருந்து யாரும் வரவில்லையென்றால் கேட்டைத் திறந்து உள்ளே சென்று வைத்துள்ள குப்பைகளை நாங்கள் உடன் எடுத்துச்சென்ற கூடையில் கொட்டி எடுத்துக்கொண்டு வருவோம். அதுபோல் எங்களின் கூடையில் மாற்றும்போது தவறி சிலதுகள் சிந்திவிட்டால் எங்களைத் திட்டுவார்கள். என்னவோ நாங்கள் வெளியிலிருந்து கொண்டுபோன குப்பையை அவர்களின் விட்டினுள் கொட்டியதுபோல். அதே போல் தினமும் பார்க்கின்ற முகங்கள்தானே, என ''வணக்கம் வைத்தால்கூட'' பதிலுக்கு வணக்கம் சொல்ல மாட்டார்கள். முகத்தை உம்மென்று வைத்திருப்பார்கள். எதுவும் பேச மாட்டார்கள். ஆனால் காய்கறி, பழங்கள், கீரை வியாபாரம் செய்பவர்களிடம் நன்றாகப் பேசுவதையும் நலம் விசாரிப்பதையும் பார்த்திருக்கின்றோம். எங்களிடம் மட்டும் ஏன் இந்த உரையாடல், உறவாடல் இல்லையென

வருத்தப்படுவதுண்டு'' என சொல்லி வருத்தப் பட்டிருக்கிறார்கள். அதேபோல் சாலையில் இவர்களின் இந்த வண்டி வரும்போது அருகில் இருப்பவர்கள், வண்டியை கடந்து செல்பவர்கள் மூக்கைப் பொத்திக்கொண்டு, முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக்கொள்வார்கள். தாகத்துக்குகூட எல்லோரிடமும் தண்ணீர் கேட்டுவிட முடியாது என சொன்னது. ''மக்களின் மனநிலை என்னவாக உள்ளது" என உணர முடிந்தது.

நமது மக்கள் ஒரு துப்புரவுத் தொழிலாளியைத் தெரிந்தவர் என்று மற்றவரிடம் சொல்லக்கூட மனமில்லை. அவர்களிடம் சிறிய அளவுக்குக்கூட உறவாட விரும்புவதில்லை. மக்கள் தங்களைப் பொறுத்தவரை நமது வீட்டில் கண்டதை வாங்கித் தின்றது போக மீதமான பொருட்களைக்கூட மற்றவருக்கு கொடுக்க மனமில்லாமல் வைத்திருந்து கெட்டுபோய் நாறிய பிறகு, இன்னும் சொல்லமுடியாத பல பொருட்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துள்ளதை குப்பைத்தொட்டியில் போட எடுத்துச் செல்லும்போது முகத்தை ஒரு திருப்பு திருப்பிக்கொண்டு செல்லும் மக்கள். "அந்த மக்களை" ''துப்புரவுத் தொழிலாளிகளை'' குறைந்த பட்சம் அவர்களும் மனிதர்கள்தானே என்ற எண்ணமாவது இருக்க வேண்டாமா? ஒரு சில வேளையில் நானே பார்த்திருக்கின்றேன். ஏதோ காரணங்களால் தனிப்பட்ட பிரச்சனையோ, குடும்பப் பிரச்சனையோ, வேலையில் பிரச்சனையோ, உடல் நலத்தில் பிரச்சனையோ அந்தப் பகுதியில் சுத்தம் செய்யும் துப்புரவுப் பணியாளர்கள் 2 அல்லது 3 நாட்கள் கழித்து வந்தால், ஒழுங்காக வரமாட்டிங்களா? குப்பை எடுக்காம எப்படி நாறிக்கிட்டு இருக்கு பாருங்க, என்று திட்டுவார்கள். ஏன் 2,3 நாட்கள் வரவில்லை என்னாச்சு என்று சாதாரணமாகக் கேட்பதுகூட இல்லை.

2,3 நாட்களுக்கே நமக்கு இப்படியென்றால் தினமும் அந்த வேலையைச் செய்கிறார்களே அவர்களின் நிலைமையை நாம் என்றாவது யோசித்துப் பார்த்திருப்போமா? நாங்கள் எப்போதுமே வீட்டிலுள்ள குப்பைகளைத் துப்புரவுப் பணியாளர்கள் வரும்வரை காத்திருந்து அவர்களின் வண்டியில் போடுவதோ, இல்லை, அவர்கள் வந்தால் எடுத்துக் கொள்ளட்டும் என விட்டுக்கு வெளியே சாலையோரம் வைப்பதோ, இல்லை. எங்கள் வீட்டில் நாங்களே எடுத்துச்சென்று அந்தப்பகுதியில் எங்கு குப்பைத்தொட்டி உள்ளதோ அங்குதான் போடுவோம். நாங்கள் எப்போதும் இதைத்தான் செய்கிறோம் இது எங்களோட பழக்கம்.

**ஏற்கனவே ஒரு சில மாநில அரசுகள் அந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டு செய்துள்ள சமத்துவத்திற்கான செயல், சமூக நீதிக்கான செயல்களை எல்லாம் ஒழித்துக்கட்டும் எண்ணமுள்ள ஒரு அரசாக மத்தியில் ஒரு அரசு அமைந்துள்ளதால், இந்த அரசு இதையெல்லாம் ஒழித்துக்கட்டும் வேலைதான் தன் முதல் வேலை என முழு மூச்சாக வேலை செய்து கொண்டிருக்கின்றது.**



நாட்டைச் சுத்தம் செய்யும் வேலை செய்யும் நபர்களுக்கு நாம் அனைவரும் சேர்ந்து அவர்களுக்கு வைத்துள்ள பெயர் குப்பைக்காரன், குப்பைக்காரி. ஆனால் இந்த நாட்டை அசுத்தம் செய்யும், பேராபத்தை ஏற்படுத்தும் கழிவுகளைக் கொண்ட தொழிற்சாலைகளை இந்த நாட்டில், மண்ணில் நிறுவியவர்களுக்கு நாம் வைத்துள்ள பெயர் தலைவர்கள்.

நாட்டில் உள்ள கடவுள், சாதி, மதம் போன்ற பல பழைமைவாத கருத்துக்களால் மக்கள் ஒற்றுமையிழந்து! பிரிவினை, வெறுப்பு சிந்தனைகளால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டும், வெட்டி மாய்த்துக்கொள்ளும் நிலையைப் போக்க வேண்டியவர்கள், மேலும் அந்த விஷ விதையை விதைக்கிறார்கள். இங்கே பல்வேறு சாதிகளாக மக்கள் பிரிவுபட்டு ஒற்றுமையின்றி இருப்பதை போக்க முயற்சிப்பது இல்லை. ஆனால் எந்தவிதமான சமத்துவமும், சமத்துவச் சிந்தனைகளும் மக்களிடையே ஏற்பட்டுவிடக்கூடாது என எண்ணுகின்றன

ஏற்கனவே ஒரு சில மாநில அரசுகள் அந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டு செய்துள்ள சமத்துவத்திற்கான செயல், சமூக நீதிக்கான செயல்களை எல்லாம் ஒழித்துக்கட்டும் எண்ணமுள்ள ஒரு அரசாக மத்தியில் ஒரு அரசு அமைந்துள்ளதால், இந்த அரசு இதையெல்லாம் ஒழித்துக்கட்டும் வேலைதான் தன் முதல் வேலை என முழு மூச்சாக வேலை செய்து கொண்டிருக்கின்றது.

இந்த இலட்சணத்தில் நாட்டைச் சுத்தப்படுத்துகிறோம் என்று ஆளும் அரசுகளுடைய எடுப்புகள் அனைத்தும் ஆளுக்கொரு துடைப்பக் கட்டையை கையில் எடுத்துள்ளது. சில கிழிந்த காகிதங்களையும், மரத்தின் காய்ந்த இலைகளையும் மட்டும் பொறுக்கிக் கொண்டுவந்து சுத்தமான இடத்தில், அதாவது குப்பைகள் இல்லாத இடத்தில் அதை ஒருவர் முன்னால் போட்டுக்கொண்டு போவது, பின்னால் ஒருவர் அதை கூட்டிக்கொண்டு வருவது இந்த நாடகத்திற்குப் பெயர் சுத்தமான இந்தியா. நாட்டு மக்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலை. அவசர, அவசியமான வேலை அந்த துடைப்பக்கட்டைகளை பிடுங்கிக்கொண்டு, இந்த வேலையை பிறகு நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். ஆனால், முதலில் உங்களை இந்த நாட்டைவிட்டு அதிகாரத்தைவிட்டு, அரசியலைவிட்டு துரத்தி அடித்தால் நாடு சுத்தமாகும். நீங்கள்தான் இந்த நாட்டில் பேராபத்தை விளைவிக்கும் விசக்கழிவுகள் என இந்த வேலையை மக்கள் செய்ய முன்வரவேண்டும். 2019-ம் ஆண்டு வருகின்ற நாடாளுமன்றத்தேர்தலில் அந்தக் கடமையைத் தவறாமல் அனைவரும் கட்டாயம் செய்யவேண்டும் அதுதான் இந்த நாட்டுக்கும் அடுத்த தலைமுறைக்கும் இன்றைய வாக்காளர் செய்கின்ற பெரிய நன்மையும், கடமையும் ஆகும் அதை செவ்வனே செய்ய தயாராவோம்! செய்து முடிப்போம்! ●


# "பாட்டி, ஏன் படிக்கல?"

அன்று இல்லம் மிகப் பரபரப்பாய் இருந்தது. ஆண்டு முழுக்க பூஜை, புனஸ்காரம், விரதம் என்று தினம் ஒரு அலுவலாய் இருந்தாலும், ஏனோ தெரியவில்லை இன்று சரஸ்வதி பாட்டிக்கு பரபரப்பும் எதிர்பார்ப்பும் டபுள் டோஸில் இருந்தது.

இருக்காதா பின்னே, ஊருக்காகச் செய்ய வேண்டுமே என்று கடமைக்குச் செய்வதற்கும், தனக்கே தனக்காக எதிர்பார்ப்பாய் காத்திருப்பதற்கும் வித்தியாசம் இருக்கும்தானே!

ஆமாம்! லண்டனில் இருந்து தன் பேத்தி இலக்கியாவைக் காண வாசலுக்கும் அடுப்படிக்குமாய் நடையாய் நடந்து கொண்டிருந்தார் சரஸ்வதி பாட்டி.

தெரு முனையில் மகிழுந்து *(Car)* வரும் சத்தம் கேட்டது. சரஸ்வதி பாட்டி கைத்தடியை சற்று இறுகப் பிடித்துக்கொண்டே வாசலுக்கு விரைந்தார். இம்முறை சரஸ்வதி பாட்டி ஏமாறவில்லை. எண்ணியவாறே, சரஸ்வதி பாட்டிக்கு எதிர்பார்த்து காத்திருந்த இலக்கை அடைந்த களிப்பு. மகிழுந்து கதவுத் திறந்தவுடனே, சுட்டிப்பெண் இலக்கியாவை வாஞ்சையுடன் கொஞ்சி மகிழ்கிறார் பாட்டி. முத்தம் கொடுக்கிறார். இலக்கியாவும் சரஸ்வதி பாட்டிக்கு முத்த மழை பொழிகிறார். இது விசித்திர மழை. இருபுறமும் மாறி மாறி பெய்யும் அன்பு மழை. இலக்கியாவின் அம்மா, அப்பா, தாத்தா என அனைவரும் மழைச்சாரலில் ஓரமாய் நின்று பாட்டிக்கும் பேத்திக்கும் இடையூறு இல்லாமல் மகிழ்ச்சியுடன் கண்டு களிக்கின்றனர்.



சரஸ்வதி பாட்டி, அடுப்படி சென்று சிறிது உப்பும் பட்ட மிளகாயும் எடுத்து வந்து இலக்கியாவை கிழக்குப்பக்கமாக நிற்கச் சொல்லி, தன் கையை இலக்கியாவின் தலையில் இருந்து கை விரல் வரை நீவி விட்டுக்கொண்டே, "அந்தக் கண்ணு, இந்தக் கண்ணு, நல்லக் கண்ணு, நொள்ளக் கண்ணுன்னு எல்லாக் கண்ணும் பட்டுப் போவட்டும்" என்றார்.

இலக்கியா சிரித்துக் கொண்டே, "பாட்டி! இது என்ன பாட்டி? உப்பு மிளகாய எல்லாம் மேல வெச்சு என்ன செய்யறீங்க? எண்ணெய் சட்டியில் போட வேண்டியத எடுத்து, ஏன் பாட்டி என் சட்டையில் போடறீங்க?" என்றார்.

சரஸ்வதி பாட்டி, "இஞ்சாரு. வந்தன்னிக்கே என் வாயப் புடுங்காத. இதெல்லாம் சாஸ்திரம், சம்பிரதாயம் ஆமாம் சொல்லிபுட்டேன்." என்றார்.

இலக்கியா சிரித்துக்கொண்டே, "சரி சரி பாட்டி. மிளகாய் கண்ணுல கொட்டாத அளவுக்கு சாஸ்திரம் சம்பிரதாயம் இருந்தா சரிதான்" என்றார்.

இலக்கியா தன் பொழுதுகளை, கிராமத்தில் பாட்டியுடன் அளவளாவி மகிழ்ந்தார்.

ஒரு நாள், இலக்கியாவும் சரஸ்வதி பாட்டியும் தோட்டத்தில் அமர்ந்து விளையாடிக் கொண்டு இருந்த போது, வீட்டு வாசலில் அஞ்சல்காரர் அழைத்தார். இலக்கியா வாசலுக்கு ஓடி வந்து அஞ்சல்காரர் தந்த அஞ்சல் அட்டையை வாங்கிக் கொண்டு மீண்டும் தோட்டத்துக்கே வந்தார். கையில் இருந்த அஞ்சல் அட்டையில் நான்கு புறமும் மஞ்சள் ஒட்டி இருந்தது.

இலக்கியா அந்த அஞ்சல் அட்டையைப் பார்த்துவிட்டு, "பாட்டி உங்களுக்கு ஏதோ கடிதம் வந்திருக்கு" என்றார்.

சரஸ்வதி பாட்டி, "கடுதாசியா? எனக்கா? எனக்கு யாரு கடுதாசி அனுப்பறா?" என்றார் வெத்தலையை மென்றபடியே. அந்த அஞ்சலட்டையை வாங்கி திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். சரஸ்வதி பாட்டிக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியாதே, அதனால் அந்தக் கடிதத்தை பேத்தி இலக்கியாவிடமே கொடுத்து படிக்கச் சொல்கிறார்.


இலக்கியா, "பாட்டி, உங்களுக்கு படிக்கறதுக்கு கண்ணு



மறுபிறப்புப்படி உலகில் உயிர்கள் பிறப்பது உண்மையானால், உலக மக்கள் தொகை அதிகரிப்பது ஏன்?

## ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து

லண்டன்



தெரியலியா? கடினமா இருக்கா? அதான் இந்த கடிதத்த படிக்க முடியலியா?" என்றார்.

பாட்டி, "என் கண்ணுக்கு என்ன கொறச்சல்? இங்கேருந்து பாத்தா, பவுர்ணமி அன்னைக்கு நிலாவுல இருக்குற கண்ணு மண்ணு கூடத் தெரியும்."

இலக்கியா, "அவ்ளோ தூரம் ஜூம்(Zoom) பன்ற கண்ண வெச்சு, இந்த கடிதத்தை நீங்களே படிக்க வேண்டியதுதானே?"

பாட்டி, "படிக்க தெரிஞ்சா படிக்க மாட்டேனா. படிச்சுபுட்டா வஞ்சனை செய்யறேன். படின்னா படிக்கறியா?" எனச் செல்லமாய் அங்கலாய்க்கிறார்.

இலக்கியாவும், "சரி பாட்டி கொண்டாங்க" என்று வாங்கி அந்தக் கடிதத்தைப் படிக்கிறார்.

கடிதத்தில், கல்விக் கடவுள் சரஸ்வதிக்கு கல்வி பூஜை செய்ய வேண்டும் என்று, பக்கத்தில் உள்ள ஊரின் கோயிலில் இருந்து, 5000 ரூபாய் கேட்டு வேண்டுகோள் வைத்திருந்தனர் அர்ச்சகர்கள்.

சரஸ்வதி பாட்டி இதைக் கேட்டுவிட்டு, "போன மாசம்தான் நம்மூரு கோயில்ல சரஸ்வதி பூஜைன்னு 10000 ரூபாய் வாங்கிட்டு போனார் அர்ச்சகர். இப்ப பக்கத்து ஊர்ல இருந்து 5000 ரூ கேக்கறாங்களா? பணத்துக்கு நா எங்க போவேன்?" என புலம்பினார்.

இலக்கியா, "பாட்டி இந்த ஊர் சரஸ்வதிய வேணும்னா, பக்கத்து ஊர் சரஸ்வதிக்கு ஒரு 5000 Rupees Fund Transfer செய்யச் சொல்லிக் கேக்கலாமா?" என்று பாவமாய் மூஞ்சை வைத்துக் கொண்டே கேட்டார்.

பாட்டி, "அப்படி எல்லாம் பேசக் கூடாது. சரஸ்வதி சாமிதான் உங்கள எல்லாம் படிக்க வைக்கறது. சாமிய அப்படி பேசப்புடாது. சாமி மார்க்க கொறச்சுப்புடும்."

இலக்கியா,"ஓ! சரஸ்வதி சாமிதான் எல்லாரையும் படிக்க வைக்கறதா பாட்டி?"

பாட்டி, "ஆமாம்! இந்த உலகத்துல எல்லாரையும் படிக்க வைக்கறது சரஸ்வதி சாமிதான்."

இலக்கியா, "அது சரி பாட்டி, லண்டன்ல என் கூட படிக்கிற ஃபிரெண்ட்ஸ் யாருக்கும் சரஸ்வதி சாமிய பத்தி தெரியாது. பூஜைன்னாலும் என்னன்னு தெரியாது. அப்ப அவங்களயெல்லாம் யாரு படிக்க வெக்கிறாங்க?" என்றார்.

பாட்டி வெத்தலையை மெல்கிறாரே ஒழிய பதில் இல்லை. ஆனாலும் வாயை மெல்லும் வேகம் மட்டும் சற்றே குறைகிறது.

இலக்கியா மேலும் தொடர்கிறார், "அது சரி பாட்டி, உங்க பேரு சரஸ்வதி. நீங்க செய்யற பூஜை, 'சரஸ்வதி பூஜை'. உங்களுக்கு ஏன் எழுத வரல? ஏன் படிக்கல??"

இப்ப பாட்டி வெத்தலை மெல்வதை நிறுத்திவிட்டார். ஆனாலும், மெல்ல யோசிக்கத் தொடங்குகிறார். •

## தோழர் சிவா சடையன்

தொடர் கதை

19

# எச்சில் தொட்டி



"இப்ப என்ன தோழர் பண்றது இப்ப இருக்கக்கூடிய நிலைமைல நாம தப்பிக்கறது சாத்தியமா தோழர்?"

"அதுக்கெல்லாம் வாய்ப்பே இல்லை தோழர். தோழர் எங்கயோ ஏமாந்திருக்கார் யாரோ அவரை வைத்து கேம் ஆடறாங்க. இன்னைக்கு இருக்கக் கூடிய அறிவியல் வளர்ச்சியில சிறைல இருந்து தப்பிச்சி போய் ஒரு நாள் கூட இருக்க முடியாது.

ரெண்டாவது விசயம் அப்படியே நாம தப்பிச்சாலும் வரக்கூடிய சிக்கலை எதிர்கொள்ள நம்மகிட்ட எந்த வகையான பின்புலமும் பணமோ ஆயுதமோ கிடையாது. தப்பிக்கவைச்சு கொல்லணும்னு முடிவு பண்றாங்க அதுமட்டும் நல்லா தெரியுது.

அந்தக் கெமிக்கல கம்பெனி முதலாளி தான் இத்தனையும் முடிவு பண்றான் நம்ம உளவுத்துறையும் காவல்துறையும் அவன் காலை நக்கிகிட்டு கெடக்குது. என்ன செய்ய முடியும் நம்மளால.

நம்முடைய நம்பிக்கை எல்லாமே மக்கள்தான் அந்த மக்களையும் பயமுறுத்தி மிரட்டி பணிய வைக்குது போலீசு. ஒவ்வொரு கிராமத்துலயும் குறைஞ்சது பத்து இன்பார்மரை வைச்சிருக்காங்க. நகரப்பகுதியில் சொல்லவே தேவையில்லை 200 மீட்டர் தொலைவுக்குள்ள ஒரு இன்பார்மர் இருந்துகிட்டே இருக்கறான்.

இந்த கட்டமைப்புங்கறது மிகப்பெரிய கொடிய அடக்குமுறை கட்டமைப்பா போயிடுச்சு. உலக முதலாளிகள் போடற எச்சில் இலையை இந்திய தரகு முதலாளிங்க நக்கி திங்கறானுக. இந்திய முதலாளிக வீசுன எச்சில் தொட்டில நம்ம மாநில முதலாளிக பொறுக்கித் திங்கறானுக.

அவனுக்கு தேவையெல்லாம் யாரோ வீசற எச்சிலைப் பொறுக்கித் தின்று இங்கே தன்னை வளப்படுத்திக்கணும். சமூகம் மக்கள் அப்படிங்கற அக்கறையெல்லாம் துளியும் இல்லை.

வேணாம் தோழர் தப்பிக்கணும்னு நெனைக்கறது ரொம்ப மடத்தனம் உயிர் போறதை தவிர வேற எதுவும் நடக்கப்போறதில்ல. அதனால் இப்போதைக்கு அந்த முடிவு தேவையில்ல வாங்க வெளிய போய்ட்டு வரலாம்." என எழுந்தார் லெனின் இருவரும் மெதுவாய் பேசியடியே நடந்தனர்.

ஒரு பத்து பதினைந்து பேருக்கு அப்போது



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் ▶ இந்து மதத்தை தோற்றுவித்து யார்?



பெயில் கிடைத்து வெளியே போகத் தயாராகிக்கொண்டு இருந்தனர்

“என்னப்பா பெயில் ஆகிடுச்சா?”

“ஆமா சார் வெளிய வர சொல்லி இப்போதைக்கு உத்தரவு அதான்!”

காமராசு ஆச்சரியத்துடன் லெனினைப் பார்த்தார். “தோழர் என்ன அவனுக்கு வெளிய வர சொல்லி உத்தரவுனு சொல்றான் அவனுக்கு யார் உத்தரவு போடறது?”

“அது ஒண்ணுமில்ல தோழர். நமக்கு எப்படி கட்சி கொள்கை இருக்குதோ அது மாதிரி அவனுகளுடைய சங்க பரிவாரங்களும் ஒரு கொள்கைய வைச்சிருக்காங்க. இது செப்டம்பர் மாசம் இல்லையா விநாயகர் சதுர்த்தி விழா நடத்தணும். ஊர் ஊரா போய் மிரட்டி காசு வசூல் பண்றது இந்த விநாயகர் ஊர்வலத்தை வாய்ப்பா வச்சுகிட்டு மதக்கலவரங்களையும் சாதிக்கலவரங்களையும் நடத்தணும்னா இது மாதிரி அடிமுட்டாளா இருக்கக் கூடிய அடிமைகள் அவனுக்குத் தேவை. அதனாலதான் இப்ப அவனுகளை பெயில் போட்டு எடுக்கறானுக. இதுபோன்ற கலவரங்களைச் செய்ய மட்டுமே இவங்களைப் பயன் படுத்திக்குவாங்க அது முடிஞ்சதும் மறுபடியும் எதாவது வழக்குல உள்ளே வந்துடுவாங்க.

அவங்களுக்குள்ளயே பல பிரச்சனைகள். ரவுடியிசம் அதிகமாக இருக்கும். வெளியே இருந்தா அவனுகளுக்குள்ளயே வெட்டிகிட்டு செத்துடுவானுக. அவனுகளுக்கான பாதுகாப்பு சிறைதான். விநாயகர் ஊர்வலம் கலவரம்லாம் முடிஞ்சு திரும்பவும் உள்ளே வந்துடுவாங்க பாருங்க.”

“வாங்க தோழர் கேண்டீன் பக்கம் போய்ட்டு வரலாம்” என்றபடி கேண்டீனை நோக்கி நடந்தார் லெனின்.

தோழர் லெனின் காமராசு இருவரும் கேண்டீன் சென்று டீ சாப்பிட்டு திரும்பி தன் அறைக்குச் சென்றனர்.

அதே நேரத்தில் “ஏய் உனக்கு பெயில் ஆகிடுச்சு என்னை விட்டு நீ போறியாடி” என்றபடி அழுது கொண்டிருந்தான் நாராயணன்.

‘‘ஆமான்டி நான் என்ன பண்ணட்டும் பெயில் போட்டுட்டாங்க நான் போய் தானே ஆகணும்” என்றான் ராகவன்.

வெளியே உலாவிக்கொண்டிருந்த கருப்பன் அவர்களை ஆச்சர்யமாகப் பார்த்தான்.

“ஏய் என்ன மாப்ள ரெண்டு பேரும் வாடி போடி னு பேசிக்கறானுவ”

முருகேசு சொன்னான் “யோவ் மாமா நாராயணனும் ராகவனும் புருசன் பொண்டாட்டி மாமா. அது கூட ஒனக்கு தெரியல”

இவர்கள் கேலி செய்வதைப் பார்த்து “வாடி நாம அந்த பக்கம் போலாம்” என நாராயணனும் ராகவனும் நகர்ந்தனர்.

ஆளாளுக்குச் சிரித்து கொண்டிருந்தனர்.

அமாவாசை அவர்களைக் கடிந்து கொண்டான்.

“யோவ் என்னயா பழக்கம் இது அடுத்தவங்களோட உணர்வுகளை கொச்சைப் படுத்திகிட்டு. அவன் நமக்கு வேண்டப்பட்டவனோ அல்லது வேண்டப்படாதவனோ அதுநமக்குத் தேவையில்ல. அவனுடைய உணர்வுகள் என்பது அவனோட விருப்பு வெறுப்பு அதில் தலையிட நமக்கு என்ன உரிமை இருக்கு. அவங்களுடைய பிரச்சனை அவங்களுக்கு விடுங்கயா. தேவையில்லாம அடுத்தவங்கள கேலி பண்ணிகிட்டு...”

நாராயணன் ராகவன் இரண்டு பேரோட பொண்டாட்டி களுமே இவனுக சிறைக்கு வந்தபிறகு ஆளுக்கொரு இணை தேடிகிட்டு ஆளுக்கொரு பக்கமா கண் காணாம போய்ட்டாங்க

அதைக் கேள்விப்பட்டதுல இருந்தே இவனுக ஜெயிலை விட்டு வெளிய போறதையே விரும்பறதில்ல அப்படியே ஒருத்தனை விட்டு ஒருத்தனுக்கு பெயில் ஆனாலும் அடுத்த ரெண்டு மூணு நாளில் எதாச்சும் ஒரு குற்றத்தை பண்ணிட்டு மறுபடியும் ஜெயிலுக்குள்ளயே வந்துருவானுக.

இவனை விட்டு அவனால் இருக்க முடியாது. அவனைவிட்டு இவனால் இருக்க முடியாது. தனிமனித விருப்பு வெறுப்புகள்ல நாம ஏன் தலையிடனும். நமக்கு அது தேவையில்லாத விசயம். இந்த சிறை பல மேதைகள் வாழ்ந்த இடம் பல மேதைகளையும் உருவாக்கின இடம். அதை பத்தி பேசுனா நிறைய பேசணும்...

**– தொடரும்**



# டெங்கு: தீவிரம் அறிந்து நடத்தல்

மருத்துவர் **யாழினி**



**2** பிள்ளைகளுக்குத் தாய். இரண்டாவது பிள்ளைக்கு வயது வெறும் 7 மாதங்கள், தாய்ப்பால் குடிக்கும் பருவம்.

ஹாஸ்பிடலுக்கு அவள் அழைத்து வரப்பட்ட பொழுது அவளின் நிலை, சவத்திற்கு இணையானது. மூன்று வார்த்தைக் கூட தொடர்ந்துப் பேச முடியாத படியான நிலை. காரணம், ஒரு வாரமாக காய்ச்சல். குழந்தைக்கு பாலூட்டுவதால் இயற்கை வைத்தியம் செய்யலாமே என்று அவளது பக்கத்து வீட்டினர் சொன்னதால் வந்த வினை. அம் மருத்துவரின் மருந்தை உட்கொண்டப் பின் சில முறை *Coffee* யின் நிறத்திற்கு இணையான வாந்தி. கேட்டால் மருந்து வேலை செய்வதின் அறிகுறி என்று சொல்லப்பட்டது.

ஆக, இரத்த வாந்தி மருந்து வேலை செய்வதின் அறிகுறி என்று நம்ப வைக்கப்பட்டு குடும்பமும் சிகிச்சையை அவரிடமே தொடர்ந்தது. பின் நிகழ்ந்தது தான் சவத்திற்கு இணையான நிலை. அவள் ஹாஸ்பிடலுக்கு வரும் போது, இரத்தத்தில் இருந்த *platelets* இன் அளவு வெறும் *5000*. ஆனால் ஆரோக்கியமான அளவோ *150,000 - 450,000*.

இரத்தத்தில் உள்ள இந்த பிளேட்டிலெட்ஸ் (*platelets*) இரத்தம் உறைவதற்கான மிக முக்கிய காரணி. ஆக, இது சடாரென குறைந்தால் டெங்கு ஷாக் சின்ரோம் (*Dengue Shock Syndrome*) என்ற நிலை உருவாகும். பின், மிகவும் பிரயத்தனப்பட்டுத் தான் அவள் மீண்டாள். டெங்கு காய்ச்சலுக்கு பப்பாளி இலையின் சாறினைத் தரலாமா என்று கேட்கப்படும் பொழுது, என்ன சொல்வதென்று தெரியவில்லை. பப்பாளி இலைச் சாற்றில் டெங்கு காய்ச்சல் உருவாக்கும் சில நிலைகளை கட்டுக்குள் வைக்க சில மூலக்கூறுகள் (*molecules*) இருக்கலாம். ஆனால் அது நோயினைத் தீர்க்கும் சிகிச்சை கிடையாது என்பதனை நினைவில் கொள்ளவேண்டும். அது சிகிச்சைக்கு உதவி புரியும் ஒரு இணை சிகிச்சையாகவே கொள்ள முடியும். மேலும் கஷாயமோ அல்லது சாறோ செய்யப்படும் பொழுது, இலையில் இருக்கும் உதவிகரமான மூலக்கூறுகள் சரியான முறையினால் வெளிக்கொணரப்பட முடியுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி.

டெங்கு ஜுரம் பொறுத்த வரை நோய்த் தடுப்பு மூன்று வகையில் செயல்படுத்தப்படுகிறது.

## 1. முதன்மைத் தடுப்பு

டெங்கு ஜுரத்தின் எச்சரிக்கை அறிகுறிகள் பற்றி மக்களிடம் விளக்கிச் சொல்லுதல், கொசுக்களின் உற்பத்தி இடங்களை கண்டு அதனை அழித்தல், முக்கியமாக கொசுக்கள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை இலக்கு வைத்து அதனை அழித்தல், நீர் தேங்குவதனைத் தவிர்த்தல், கொசு வலைகள், கொசு விரட்டிகளைப் பயன்படுத்துதல். முதன்மைத் தடுப்பு நடவடிக்கைகள் என்பது வருடம் முழுமைக்கும் தொடர்ந்து நிகழ்ந்தாகவேண்டிய செயல்பாடு.

## 2. இரண்டாம் நிலை தடுப்பு

*2-3* நாட்களுக்கு மேற்பட்ட ஜுரமோ அல்லது டெங்கு ஜுரத்திற்கான அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று கண்டால் உடனடியாக மருத்துவமனைக்கு காலம் தாழ்த்தாமல் விரைதல். இது நிகழாமல் வீடு வைத்தியம் செய்து கொண்டோ அல்லது ஜுரத்தினைத் தணிக்கும் மாத்திரைகளை எடுத்துக்கொண்டோ காலம் தாழ்த்தும் போது, அவ்வேளையில் நோய்த் தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புகள் தீவிரமடைந்து, இரத்தக்கசிவு ஏற்பட்ட பின் தான் மருத்துவமனைக்கு விரைதல் என்பது நடக்கும். காலம் தாழ்த்தினால் இறப்பு கூட ஏற்பட சாத்தியம் உள்ள ஜுரம் இந்த டெங்கு ஜுரம்.

## 3. மூன்றாம் நிலை தடுப்பு

டெங்கு ஜுரம் என்று மருத்துவரால் உறுதிப்படுத்தப்பட்ட பின் மேலும் சிக்கல்களை தவிர்க்க நீர் அவ்வப்பொழுது குடித்துக்கொண்டு இருப்பது முக்கியம். அதோடு தீவிரத்தின் அறிகுறிகளான இரத்தக்கசிவு இருக்கிறதா என்றும் அதிர்ச்சிக்கான அறிகுறிகள் ஏதும் தென்படுகிறதா என்றும் கவனிப்பது மிகவும் அவசியம்.

மலேரியாவிற்கான ஒரு மருந்தின் மூலக்கூறே, ஒரு வித செடியின் இலையிலிருந்து தான் எடுக்கப்படுகின்றது. ஆனால் அம்மூலக்கூறினை வெளிக்கொணர மிகத் துல்லியமான முறைகள் உள்ளன என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும். தயவு செய்து குணமாக்கப்படக்கூடிய ஒரு நோய்த்தொற்றினை சரியான சிகிச்சையைச் சரியான நேரத்தில் எடுக்காமல் உயிரினைக் குடிக்கும் நோயாக மாற்றிவிடாதீர்கள்.

நிலவேம்பு கசாயமோ, பப்பாளி இலை சாறோ. அதனை மாத்திரமே நம்பி உயிரை இழக்காதீர்கள். •



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் ▶ இராமனைச் செருப்பால் அடித்ததற்கு அலறும் பக்தர்களே, தினமும் பூமாதேவியை செருப்பால் மிதிக்கலாமா?

# மண்டல்
# ஓர் மகாசாசனம்

## மண்டலுக்கு முந்தைய மனு ஆணையம்

மண்டலுக்கு முந்தைய பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம் 29.1.1953ஆம் ஆண்டில் காகா சாகேப் கலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்டது. சென்னை மாகாணத்தில் அமலில் உள்ள கம்யூனல் ஜி.ஓ விளைவால்தான் தனக்கு மருத்துவம் படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லையென செண்பகம் துரைராஜ் என்பவரை கருவியாகக் கொண்டு ஒரு பார்ப்பனர் அளித்த வழக்கினால் ரத்து செய்யப்பட்ட கம்யூனல் ஜி.ஓ.விற்குப் பிறகு தந்தை பெரியாரின் போராட்டத்தினால் அரசியலமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டதற்குப் பின்னரும் சுதந்திரத்திற்குப் பிறகுமான முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம் அமைந்தாலும் அதன் வழியே எவ்வித மாற்றங்களும் ஏற்பட்டு விடாத படி மிக கவனமாக மனு நூலின் சாராம்சங்களுடன் வர்ண பாகுபாடுகளை நியாயப்படுத்தும் விதமாக ஒருவருடைய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நிலைக்கு சாதி பாகுபாடு காரணமல்ல, தாழ்த்தப்பட்ட நிலையை அளவிட சாதி சார்ந்த அளவுகோலைப் பயன்படுத்துவதை தவிர வேறு ஏதேனும் அளவுகோலை நிர்ணயிக்கலாம் என பல அடுக்கடுக்கான மனு நூல் அம்சங்களை கொண்ட அறிக்கைகளை வெளியிட்டு காலேல்கர் ஆணையம். தன்னை மனுநூல் ஆணையமாக நிரூபணம் செய்து கொண்டது.


## மனுவை மடித்த மண்டல்

பீகார் மாநிலத்தில் சமூக சீர்திருத்த வாதியாக வாழ்ந்த ராஷ்பிகாரி மண்டலின் மகனான பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது ஆணையம் இவரைத் தலைமையாகக் கொண்டு மண்டல் ஆணையமாக மலர்ந்தது தனக்கு முந்தைய கலேல்கர் ஆணையம் எனப்படும் மனு ஆணையத்தின் அடிப்படை அறிக்கையையே மாற்றி அமைத்தார் மண்டல்.

ஒருவருடைய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நிலைக்கு சாதி அமைப்பே காரணமென ஆணித்தரமான ஆதாரங்களை முன்வைத்து ஒருவர் சாதி அமைப்பில் பெறுகின்ற படிநிலைக்கும் அவர்களது கல்வி, சமூக மதிப்பு, பொருளாதார நிலை போன்ற அனைத்திற்குமான நெருங்கிய வலைப்பின்னல் தொடர்பு உண்டு




தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவிகள் என்பது அறிவுடையோர் ஏற்கும் செயலா?



வி.பி.சிங்



இரத்தினவேல் பாண்டியன்

என்பதையும், இப்படிப்பட்டச் சமூக நிலையை இந்து மதம் மனநிறைவுடன் காலம்காலமாக கடைப்பிடித்து வருவதுடன் அழியாமல் பாதுகாக்க பல ஏற்பாடுகளை செய்துள்ளது என நாடு முழுவதும் கள ஆய்வுகள், பொதுக்கூட்டங்கள், கருத்துக்கேட்பு கூட்டங்கள் என அனைத்து ஆதாரங்களின் வழியே ஆய்வுகளை முன்வைத்து, கலேல்கர் ஆணையம் பிற்படுத்தப்பட்ட நிலைக்கான அளவுகோலையே அறியாமல் அதை பற்றிய அறிக்கையை அளித்திருக்கும் விநோதங்களையும் சுட்டிக் காட்டினார் பி.பி மண்டல்.

## மண்டலுடன் வி.பி.சிங்

எத்தனையோ பார்ப்பனீயக் கெடுபிடிகளுக்குப் பின்னர் மண்டல் அவர்கள் தன்னுடைய ஆணையத்தின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி 31.12.1980இல் தனது அறிக்கையை அரசிடம் ஒப்படைத்தார். ஆனால் அவ்வறிக்கை பத்தாண்டுகளாக கிடப்பில் கிடந்தது. 27சதவீத இட ஒதுக்கீடு பரிந்துரைத்த ஆணைய அறிக்கை பத்தாண்டுகளாக கிடப்பில் கிடப்பதை காணப் பொறுக்காமல் பிரதமராக ஆட்சி பொறுப்பேற்றதும் வி.பி. சிங் அவர்கள்கையில் எடுத்தார். மண்டல் அறிக்கையை அமல்படுத்தினால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் 07.08.1990இல் நாடாளுமன்றத்திலேயே மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை அரசு ஏற்பதாக அறிவித்தார். காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி என ஒட்டுமொத்த கட்சிகளின் எச்சரிக்கை, எதிர்ப்புகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக நின்று, இந்திய வரலாற்றில் இட ஒதுக்கீட்டின் மூலமாக வர்ணாசிரம பாகுபாடு கட்டமைப்பையே உடைக்க முயன்று அதன் விளைவால் ஆட்சியையே இழந்த பிரதமர் என்ற மாபெரும் வரலாற்று சாதனை நாயகராகவும் இடஒதுக்கீட்டின் நாயகராகவும் விளங்கிவிட்டார் வி.பி சிங்.

## வட இந்தியாவின் வஞ்சம்

மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை ஏற்க வேண்டாமென தடுத்தவர்கள் அடுத்தகட்டமாக மண்டல் ஆணையத்தின் பரிந்துரை ஏற்கப்பட்டதை எதிர்த்து பீகார், ஒரிசா, குஜராத், உத்திரபிரதேசம், இராஜஸ்தான், என வட மாநிலங்களில் வன்முறையை முன் நின்று நிகழ்த்தினர். வன்முறையின் ஒரு பகுதியாக 18.08.1990இல் வெளிவந்த டைம்ஸ்ஆஃப் இந்தியா பத்திரிக்கையின் தலையங்கத்தில் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான கிளர்ச்சியை தேச நலனுக்கு ஆதரவான கிளர்ச்சி என எழுதியிருந்தது. இந்த வன்முறையில் சௌகான் என்ற இளைஞர் தீக்குளித்து இறக்கும் போது இறக்கும் தருவாயில் மண்டல் கமிஷனை உயிருள்ளவரை எதிர்ப்பேன் என சொன்னபடியே இறந்ததாகப் பொய்யானச் செய்தியை இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம் ஆஃப் இந்தியா போன்ற நாளேடுகள் சிறிதும் கூச்சமற்று எழுதின. இதையெல்லாம் விட கூடுதலானச் செய்தியாக சௌகான் தற்கொலை செய்ய முயன்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை பல பத்திரிக்கைகளும் அடிப்படையான பத்திரிக்கை தர்மங்களையும் மீறி வன்முறை கனலுக்கு எண்ணெய் வார்ப்பது போல வெளியிட்டிருந்தன இதன் விளைவுகளால் உச்சநீதிமன்றம் மண்டல் ஆணையத்தின் பரிந்துரைக்கு இடைக்காலத் தடை விதித்தது .



## தீர்ப்பும் இரத்தினமும்

பாபர் மசூதி இடிப்பையும் மண்டல் ஆணையத்தின் எதிர்ப்பையும் தேசியத்திற்கான முழக்கமாக முன்வைத்த பார்ப்பனீயத்தின் எண்ணத்திற்கு எதிராக 16.11.1992இல் 11 நீதிபதிகளை கொண்ட குழுவில் ஐந்து நீதிபதிகள் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான தீர்ப்பையும், ஆறு நீதிபதிகள் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவானத் தீர்ப்பையும் அளித்தனர். இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த ஆறு நீதிபதிகளுள் ஒருவரே தமிழகத்தைச் சேர்ந்த பெரியார் தொண்டரான நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள். இவர் *To What Extent Can the reservation be made* என்ற தலைப்பில் 86 பக்கங்களுக்கு தனி தீர்ப்புரை ஒன்றையே எழுதினார். பொதுவாக குழு நீதிபதிகளின் தீர்ப்பில் தனி நீதிபதியின் தீர்ப்புகள் வெளியிடுவது வழக்கமில்லை என்றாலும் கூட இவ்வழக்கானது என்னுடைய மக்களின் இன உணர்வு சார்ந்தது எனக் கூறி தனித்த தீர்ப்பை எழுதினார்.

அதிலே கிரீமிலேயர் என்பதை பொருளாதாரம் சார்ந்து அளவீட்டால் குடும்பத்தின் செல்வம் எவ்விதமான நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும் என பொருளாதார அளவுகோல் மீதான கேள்விகளையும், அண்ணன் தம்பி சொத்து கதை, அரசு ஊழியரின் ஊதியமற்ற விடுப்புக்கதை, நிலத்தை தரிசாக போட்ட பண்ணையார் கதை, திடீர் திருமணமாகி பணக்கார மாமனாருக்கு மாப்பிள்ளையான வாலிபரின் கதை, அன்னக்காவடி கதை, என கதைகளின் எடுத்துக்காட்டு வாயிலாக தெள்ளத்தெளிவாக எவரும் மறுப்பதற்கு வாய்ப்பின்றி ஏற்கக்கூடிய தீர்ப்பை அளித்து மண்டலின் அரிய பணிக்கு மகுடம் சூட்டி நமது மனங்களில் நீங்காத இடம் பிடித்து இட ஒதுக்கீடு நாயகர்களாக மண்டலும், வி.பி.சிங்கும், இரத்தினவேல் பாண்டியனும் நிற்கிறார்கள். எனில் இவை அனைத்திற்கும் மூல காரணமான போராளியாக விளங்குபவர் தந்தை பெரியார் அவர்களே. ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

தேவர்களாலும், முனிவர்களாலும் கணிக்கப்பட்ட இராமன் சீதை மூகூர்த்தம் வனவாசத்திலா கொண்டு போய் விடவேண்டும்?

# “சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குச் சென்று வழிபட அனைத்து வயது பெண்களுக்கும் உரிமை உண்டு”

‘சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குச் சென்று வழிபட அனைத்து வயது பெண்களுக்கும் உரிமை உண்டு” என்று செப்டம்பர் 28 அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பினை உச்சநீதிமன்றம் வழங்கியது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஆர்.எப்.நாரிமன், ஒ.எம்.கான்வில்கர், டி.ஒய்.சந்திரசூட் ஆகிய நால்வரும் ஒரே தீர்ப்பை வழங்கினர். அதே சமயம் இந்த வழக்கை விசாரித்த அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்றிருந்த பெண் நீதிபதி ‘இந்து மல்கோத்ரா” மாறுபட்டத் தீர்ப்பை வழங்கினார்.

முதன் முதலில், 1991 ஆம் ஆண்டு மகாதேவன் என்பவர் கேரளா உயர்நீதிமன்றத்தில் பெண்களை சபரிமலை கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற வழக்கைத் தொடர்ந்தார்.

இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் மனம் புண்படுத்தும் விதமாக உள்ளது என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது கேரள உயர்நீதிமன்றம்.

அதன் பிறகு 2006இல் இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரண்டு ஆண்டுகள் கழித்து 2008இல் வழக்கை ஏற்று, அதன் பிறகு 7 ஆண்டு வழக்கை நிலுவையில் வைத்து அதன் பிறகு 2016இல் விசாரித்து 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசனம் அமர்வு முக்கியமானத் தீர்ப்பை வழங்கியது.

இந்தத் தீர்ப்பை ஹிந்துத்வாவாதிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றார்கள். 10 வயதிற்குட்பட்ட சிறுமிகளும், 50 வயதைக் கடந்த பெண்களும் சபரிமலைக்குச் செல்லலாம் என்ற நிலையை மாற்றிப் பெண்களும் செல்லலாம், அனைத்து வயது பெண்களும் செல்லலாம்



**இப்படிப்பட்ட வரலாற்றுத் தீர்ப்பை எழுத அடிப்படைக் காரணமாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் குழு தலைவர் பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கருக்கும், தன் வாழ்நாள் முழுவதும் பெண்ணுரிமைக்காகப் போராடிய தலைவர் தந்தை பெரியாருக்கும் பெண்கள் நன்றி காட்ட வேண்டும்.**

என்ற தீர்ப்பை இந்து மதவாதிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அனைத்துப் பெண்களையும் அனுமதிக்கக் கூடாது என்று வாதாடிய வழக்கறிஞர் சாய் தீபக் வைத்த வாதம் என்னவென்றால், 'அய்யப்பனின் பிரம்மச்சரியம் கெட்டுவிடுமாம்", ஏன் உங்கள் கடவுள் அய்யப்பன் பெண்களை காம கோணத்தில் தான் பார்ப்பாரா? அன்னையாக, தங்கையாக, அக்காவாகவெல்லாம் பார்க்க மாட்டாரோ? ஆப்போ கோளாறு எங்கே உள்ளது உங்கள் சிந்தனைக்கே!.

முன்பெல்லாம் கோவிலுக்கு ஆண்களை போக வேண்டாம் என்பார்களாம். ஏனென்றால் அங்கு தேவதாசிகள் இருப்பார்கள், அதனால் ஆண்கள் கெட்டுவிடுவார்களாம். இப்போது சபரிமலைக்கு பெண்களைப் போக வேண்டாம் என்கிறார்கள், ஏனென்றால் அங்கு அய்யப்பன் இருக்கிறாராம். இப்படி எல்லாம் முகநூலில் செய்திகள் பார்க்கின்றோம்.

ஏன் பெண்கள் செல்லக்கூடாது? அய்யப்பன் வெறும் பிரம்மச்சாரி அல்ல, 'நைஷ்டிக பிரம்மச்சாரி" அப்படி என்றால் 'வாழ்நாள் முழுவதுக்கும் பிரம்மச்சாரியாக இருப்பவர்' என்பது பொருள். மாதவிடாய் இருக்கும் பெண்கள் கோவிலுக்கு வரக்கூடாது, கோவில் தீட்டாகிவிடும் என்பது இவர்களின் கருத்து. இது எவ்வளவு பெரிய கொடுமை! இயற்கை உயிர்களில் மனித இனம்பெண்ணினத்திற்கு வழங்கிய தனித்தன்மை தீட்டு என்றால் என்ன அசுத்தம் என்பது பொருள். அந்த மாதவிடாய் காலத்தில் பெண்களை தீண்டத்தகாதவர்களாக, அசுத்தமானவர்களாக வைத்திருக்கும் இந்த சமூகம் எவ்வளவு மோசமானது, இவற்றை படைத்தது கடவுள் என்றால் அந்த கடவுள் எவ்வளவு அயோக்கியர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கடவுள் அனைவருக்கும் பொது என்றால் பெண்களுக்கு மட்டும் இந்த கட்டுப்பாடு இதன் பெயர் தான் பாரம்பரியம், கலாச்சாரம் என இதைத்தான் நாம் ஒழிக்க வேண்டும் முதலில்.

பெண்கள் விடுதலை பெற்றால் தான், ஆண்களும் சுதந்திரமாக இருக்க முடியும். இந்தச் சமூகமும் சுதந்திரமாக இருக்க முடியும் என்றார் தந்தை பெரியார். இந்த நாட்டில் ஓடும் ஆறுகள், நதிகளுக்கு பெண் பெயரை வைத்துக்கொண்டு, எண்ணற்ற பெண் தெய்வங்களை வழிபடும் பாரத மாதாகி ஜே! என்ற கோஷம் போட்டுக் கொண்டு பெண்கள் கூட செல்லக்கூடாது என்று சொல்வது தான் கலாச்சார காவலர்களின் ஹிந்துத்வம்.

ஹிந்து மதவாதிகள் நம்மைப் பார்த்து கேட்கும் கேள்வி நான் உயர்ந்த பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள ஒரு நீதிபதி மறைந்த முதல்வர் ஜெயலலிதா இறந்தபிறகு நான் ஜெயலலிதாவை ஒருதலையாகக் காதலித்தேன் என்ற ஆசையை வெளிப்படுத்திய மார்கண்டேய கட்ஜூ சொல்கிறார். நீதிபதி தங்கள் கட்டுப்பாட்டை இழந்துவிட்டனர், பெண் நீதிபதி இந்து மல்கோத்ரா தவிர இஸ்லாமிய பெண்கள் மசூதிக்குள் அனுமதிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்குமா என்று?



நியாயமான கேள்விதான். இப்படி ஒரு வழக்கை இஸ்லாமியப் பெண்கள் யாரேனும் வழக்கு தொடர்ந்தால், அதை நாம் வரவேற்போம், ஆதரிப்போம். மதங்கள் பெண்களைப் பொருளாகப் பார்க்கிறது, நாம் பாலின சமத்துவத்தையே கேட்கின்றோம்.

மாதவிடாய், தீட்டு என்று சொல்பவர்கள்தான் பகவதி அம்மனுக்கு விழா நடத்துகிறார்கள். அய்யப்பன் பிரம்மச்சாரி கடவுள் என்கிறார்கள் கேரளாவில் அய்யப்பனுக்கு மேலும் 4 கோவில்கள் உள்ளது, அதில் அய்யப்பனுக்கு இரண்டு மனைவிகள் உண்டு முதல் மனைவியின் பெயர் பூரணி, இரண்டாம் மனைவியின் பெயர் புஷ்கலை. அய்யப்பன் பிரம்மச்சாரி என்பதே புரட்டு. பிரம்மச்சாரி கடவுள் என்றால் எப்படி இரண்டு திருமணங்கள் நடந்தது. இதற்கு இவர்களிடத்தில் பதில் இல்லை, பதிலும் வராது.

எப்படி இருந்தாலும் வைதீகத்திற்கு கிடைத்த பெரும் அடிதான் இந்த தீர்ப்பு. சாமியே சரணம் அய்யப்பா! என்ற பெண்கள் குரல் முழக்கம் சபரிமலைக்குள் ஒலிக்கட்டும். வாழ்த்துகள்.

இத்தகையத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி சந்திரசூட் எல்லா பெண்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றார் இவர்களை மாத்திரம் வேற்றுமைப்படுத்துவது எவ்வகையில் நியாயம்? என்ற அறிவார்ந்த கேள்வியை கேட்டமைக்கும், வழிபடுதலில் பாலின வேற்றுமையை அறுக்கும் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைக்கு எதிரானது: என்று தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளுக்கும் நன்றி.

இப்படிப்பட்ட வரலாற்றுத் தீர்ப்பை எழுத அடிப்படைக் காரணமாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் குழு தலைவர் பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கருக்கும், தன் வாழ்நாள் முழுவதும் பெண்ணுரிமைக்காகப் போராடிய தலைவர் தந்தை பெரியாருக்கும் பெண்கள் நன்றி காட்ட வேண்டும்.

இந்தத் தீர்ப்பை மேல்முறையீடு செய்யமாட்டோம், பெண்கள் சபரிமலை கோவிலுக்கு செல்ல உரிய பாதுகாப்பு வழங்குவோம் என்று கூறி பல நெருக்கடிகளைச் சந்தித்து வரும் கேரள முதல்வர் பினராய் விஜயன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும். கோவிலுக்குள் பெண்கள் சென்றால் வெட்டுவோம், குத்துவோம், தற்கொலை செய்து கொள்வோம் என்று பேசுவது அடிப்படையில் அவர்களுக்குப் பயம் வந்து விட்டது, ஹிந்து மதத்தின் அடிபீடம் ஆடித்தான் போயிருக்கிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த வெற்றி! வெல்லட்டும் பாலியல் சமத்துவ, சமூக நீதி!!. ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
இராவணன் தங்கையை மானபங்கப்படுத்திய இராமன் எப்படி ஒழுக்கமுள்ள கடவுள் ஆவான்?

# உயிர்மெய்

2

முத்தையா வீட்டை கண்டுபிடிக்கவே ரொம்ப நேரமாயிடுச்சி, நல்லதம்பியைப் பார்த்ததும், முத்தையா பணிவாக ஓடிவந்து வரவேற்றான். அரிமாவுக்கு ஆச்சரியமா போயிடுச்சு.

‘அய்யா... வாங்க நான் எதிர்பார்க்கலே” என்று வீட்டுனுள் அழைத்துச் சென்றவன், அரிமாவிடம் முகம் கொடுத்துப் பேசலை. நல்லதம்பியை உட்காரச் சொல்லிவிட்டு நின்றுகொண்டான். நல்லதம்பி அரிமாவை உட்கார சைகை காட்டினார். அரிமா அவரருகில் உட்கார்ந்தான்.

நல்லதம்பி பேச்சை ஆரம்பித்தார்.

“முத்தையா, நல்லாயிருக்கியா?”

‘ஏதோ ஓடுதுயா காபி, டீ என்ன சாப்பிடறீங்கய்யா”

‘அதெல்லாம் இருக்கட்டும். நேரமில்ல நேரடியா வரேன் அறிவேந்திக்கு என்ன பிரச்சனை? அரிமாவிடம் நீ பேசியவிதம் நம்பும்படியாயில்ல. ஏன் அப்படி?” அய்யா, என்று அவர் காலில் விழுந்து ‘என்னை மன்னிச்சிருங்கய்யா நான் போதையில் பேசிட்டேன்” அரிமா எரிச்சலுடன், ‘போதைன்னா, பொண்டாட்டி, பொண்ணுன்னு தெரியாதா? அண்ணே... நம்பமுடியலை” என்றான்.

நல்லதம்பி, ‘கொஞ்சம் இரு அரிமா” என்று அடக்கிவிட்டு ‘முத்தையா, நீ மேல சொல்லு....” என்றார். அவன் பேசாம தலைகுனிந்து நின்றான். நல்லதம்பிக்கும் கோபம் வந்தது. அடக்கிக்கொண்டு சற்று நிதானமாக,

‘முத்தையா, அறிவேந்தி எவ்வளவு நேர்மையாகவும், கண்ணியமாகவும் இருப்பான் என்பது உனக்கு நல்லா தெரியும். உன்னை எப்படி காப்பாத்தினான், உன்னிடம் பாசமாயிருந்தது மட்டுமில்ல எந்த அளவு நம்பினான் என்று எனக்கே தெரியும். இன்னைக்கு ஒ..... பிள்ளைகள் உயர்ந்த இடத்துக்கு வர அவன்தான் காரணம். நானே வந்து கேக்கறேன். பதில் சொல்லாமயிருந்தா என்னா அர்த்தம்”. முத்தையா தலைகுனிந்தபடியே இருந்தான்.

அரிமா பொறுமையிழந்து எழுந்தான், அவனை பார்வையாலேயே உட்கார வைத்து நல்லதம்பி உருக்கமாக

‘முத்தையா, நீ ஏன் இப்படி இருக்கன்னு தெரியல. ஏம்பா, காலைல வீட்டைவிட்டு போன அறிவேந்தி எங்க போனான்னு தெரியலை. செல்லிலும் வரவில்லை. தொடர்பு எல்லைக்கு வெளியில் உள்ளதாக... முத்தையா மனசாட்சியில்லாம இப்படி நிக்கறீயே... சே... மனிதன்னா நன்றியிருக்கனும்...” கண்கலங்க நிறுத்தினார்.

‘‘அண்ணே, சும்மா என்ன பேசிக்கிட்டு. வாங்க காவல்நிலையத்துக்கு” அரிமா அழைக்க

முத்தையா பதற்றத்துடன் நல்லதம்பி கையைப் பிடித்துக்கொண்டான் அவன் கண்களில் நீர்வழிய

“அய்யா, நான் என்ன பண்றதுன்னு தெரியலை. நீங்க சொல்லுங்கய்யா, எனக்கு எல்லாமே அறிவய்யாதான்யா, அவருக்காக உயிரையும் தருவேன்னு எல்லார்கிட்டேயும் சொல்லி வாழ்ந்தவன்யா நான். அப்படிப்பட்டவன் அரிமாவிடம் ஏன் மரியாதைகூட இல்லாமல் பேசன என்று கேட்டீங்க, சொல்றன்யா... சோத்தை போட்டுட்டு சாப்பிடும் போது விஷத்தை ஊத்தினா? எப்படியிருக்கும் சொல்லுங்கய்யா? கொஞ்சம் பேசவிடுங்கய்யா, யாருக்கும், இதுவரை நான் யாரிடமும் சொல்லாததைச் சொல்றேன். அறிவு அய்யாதான் சொல்ல வேண்டாம்னு சொன்னார்.” அரிமா இடைமறித்து “முத்தையா, அண்ணன் மேலேயே குற்றம் சொல்றீயா, அடப்பாவி. தங்கமான மனிதன்டா எங்கண்ணன்” நல்லதம்பி “அரிமா, பேசாம இருக்கமாட்டே சும்மாயிருந்தா இரு இல்லைன்னா போயிடு” என்று கண்டிப்புடன் சொல்ல, அரிமா வெறுப்புடன் கேட்கலானான். முத்தையா தொடர்ந்தான்.

“ஒரு நாள் அலுவலகத்தில் ‘அறிவைய்யா கோப்புகளை பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு உதவியாளரான நான் பேசாம நின்றிருந்தேன். அப்ப, உயர் அதிகாரி தொலைப்பேசியில் அய்யாவிடம் பேசினார். பேச, பேச, அய்யாவின் முகம் கோபமாக மாறி “*No Sir* எனக்கு பிடிக்கலை. எனது தந்தையார் வாங்கியது. அந்த மாந்தோப்பு அதைச் சுற்றியுள்ள இடங்களும், என் தந்தையின் விருப்பப்படி திராவிடக் கலை, கல்வி, வறுமை நிலையில் உள்ள நமது பிள்ளைகளுக்கு கற்பிக்க அவர்கள் உயர்கல்விப் பெற திராவிடக்குடில் அமைக்கவுள்ளேன். அங்கு போய் தில்லுமுல்லு அரசியல்வாதிகளின் கண்டெய்னர்கள் விட அனுமதிக்கமாட்டேன். சாரி சார்” என்றார். தொடர்ந்து அந்த பக்கத்தில் பேச்சு. மீண்டும் அய்யா “என்ன சார் இது நீங்களே இப்படிச் செய்யலாமா? வண்டிகளை விட்டாச்சா. உங்கள் மீது நான் வைத்த மரியாதைக்கு இதுதான் பரிசா ஒருவாரம் மட்டும்னா? யார் எழுதிக் கொடுப்பது? யாரிடம்

**“ஒழுங்கா சொன்னாலும் புரியல, இலைமறை தாமரை மறைவா சொன்னாலும் புரியல. இந்தா மேன் அறிவு, நாங்க போனவுடன் போலீஸ் வரும். கண்டெய்னரை ஓப்பன் பண்ணும், உன்னை லபக்குன்னு பிடிக்கும். நீ எது சொன்னாலும் கேக்காது. நாங்க வைச்சது 10 ஆயிரம் கோடி, நீ வைச்சது துப்பாக்கி வெடிகுண்டுகள்ன்னு மாறிடும். கூடவே ரெண்டு டெட்பாடி, போதுமா கோட்சே சிலைக்கு மாலைப் போடறவனெல்லாம் கூட இருக்கும் போது அய்டியா தானா வரும்.”**


“இராவணன் விரும்பாத பெண்ணைத் தொட்டால், தலை சுக்கு நூறாகும்: உடல் பற்றி எரியும்” என்பது புராணம், ஆனால் சீதை விசயத்தில் ஏன் அது பலிக்கவில்லை?

கடலூர் இள.புகழேந்தி

நான் பேசுவது? நீங்க பொறுப்பு ஏத்துக்கிறீங்களா? சரி நான் நேரில் வருகிறேன்" என்று கோபமாக தொலைப்பேசியை வைத்தார்.

நான் திருதிருன்னு முழித்தப்படி நின்றேன். அய்யாவின் எரிச்சல் கோபத்தை இதுவரையில் இப்படி நான் பார்த்ததே கிடையாது.

"முத்தையா, நம்ம காரை எடுக்க சொல்லு. சொந்த வேலையா தோப்புக்கு போறேன்" என்று புறப்பட ஆயுத்தமானார். அரசு ஓட்டுநரை காலையில் வர சொல்லிவிட்டு வீட்டில் இருந்து வந்த காரில் சென்றார். எனக்கு அலுவல் நேரம் முடியாததால் என்னை விட்டுவிட்டு தனக்கு அனுமதிக்கடிதம் எழுதி வைத்துவிட்டு தான் போனார். அவர் போன சிறிது நேரத்தில் உயர் அதிகாரியின் அலுவலர் ஒருவர் வேகமாக வந்து அய்யாவிடம் உடனே ஒரு தகவல் சொல்ல வந்ததாக கூறினார். நான் அவர் சென்றுவிட்டதாகச் சொன்னதும், என்னைக் காரில் ஏற்றிக்கொண்டு அய்யாவின் இடத்துக்கு வழிகாட்டச் சொன்னார். நானும் எதுவும் பேசாமல் உடன் சென்றேன். அங்கே அமைச்சர்கள் இருவர். இரண்டு மூன்று அதிகாரிகள் அய்யாவுடன் பேசிக்கொண்டிருந்தனர்.

நாங்கள் போனவுடன் அங்கு இருந்த சூழ்நிலையில் அமைதியாக ஒதுங்கி நிற்க வேண்டியதாயிற்று.

அய்யாதான் வேகமாக பேசிக்கொண்டிருந்தார். தனது கைப்பேசி பதிவினைப் போட்டான் முத்தையா,

"இந்த இடத்தை நான் விக்க மாட்டேன். இது என் தந்தையின் விருப்பப்படி 'திராவிடக்குடில்' அமைய உள்ள இடம். முதல்ல வண்டிகளை எடுக்கச் சொல்லுங்க. எனக்கு என் வேலையை விட என் நேர்மையும், உழைப்பும், கொள்கையும் தான் முக்கியம். பணியின் நிமித்தம் உங்களை மதிக்கிறேன். தயவு செய்து கிளம்புங்க"

மந்திரிகளில் ஒருவன் அய்யாவை சாந்தப்படுத்தினான் 'கூல்டவுன், கூல்டவுன் அறிவேந்தி சார் எங்களை கூட திராவிடரியக்கம்னு சிலர் சொல்லி அந்த சாக்கில எல்லாரையும் தரக்குறைவா பேசறானுங்களே உங்களுக்குத் தெரியாதா? திராவிடக்குடில் நன்றாக தொடங்குங்க வாழ்த்துகள். அப்பாவின் இடத்தை விற்க முடியாதுன்னு சொல்லிட்டீங்க. ஓகே... ஒரே மகனா போயிட்டீங்க, ஒன்னும் சொல்றதுக்கு இல்லே. இப்ப நாங்க கேக்கறது தெரிஞ்சோ தெரியாமலோ மூன்று கண்டெய்னர்கள் உங்க தோப்புக்குள்ளே நிற்கிறது, விடுங்க ஒரு வாரம் கழிச்சி எடுத்துக்கிறோம். என்ன சொல்றீங்க அறிவேந்தி" என்று நயமாகவும் தந்திரமாகவும் பேசினான். உடனே அறிவேந்தி

"சார், நீங்க எதுசொன்னாலும் என்னால் ஏற்க முடியல. நீங்களே, நேரில் வந்து பேசறீங்கன்னா கண்டெய்னர்களில் உள்ளது எவ்வளவு முக்கியமான, சட்டப்படி தவறானது, என்று புரிகிறது. மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், வண்டிகளை எடுத்துக்கொண்டு போயிடுங்க" என்றார்.

இன்னொரு மந்திரி சற்று கடுப்பாய், பேசிய மந்திரியை பார்த்தபடி,

"நண்பா, இவ்வளவு நேரம் உனக்குத் தெரியாதா, சார் தான் நம்ம மாவட்ட DRO. DRO-ஆன சும்மாவா, இவருகிட்டல்லாம் நயமா, நாகரீகமா பேசக்கூடாது. நடக்க போவதை உடைச்சி சொல்லிடனும். அறிவேந்தி சார். சாரி DRO சார் தெளிவா அமைச்சர் சொல்லிட்டார். நீங்க தான் விபரமில்லாம நியாயம் பேசிக்கிட்டு நிக்கறீங்க தோ... பார் ஏற்கனவே ஊழல் வழக்கு தண்டனை எல்லாம் பார்த்துவிட்ட முதல் மந்திரி விஷயம் இது. புரிஞ்சிக்கோ. மக்களை ஏமாத்தி பெற்ற பணத்தில் கொஞ்சம் கொடுத்து திரும்பவும் ஆட்சிக்கு வருவோம். எங்களை என்னான்னு நினைச்சே... DRO... அம்பதாயிரம் போட்டு கம்பெனி ஆரம்பிப்போம். ஒரே வருடத்தில் நூறு கோடி கம்பெனி கணக்கில் காட்டும் டெல்லி புள்ளிக்கெல்லாம் இதில் பங்குண்டு. நீ என்ன பெரிய பிஸ்கோத்து, எங்களுக்கு ஒரு இடம் தேவைப்பட்டது. வண்டிகளை விட்டவுடன் தான் ஓ... இடம்னே எங்களுக்கு தெரியும். அட நம்ம ஆபிசர், பிரச்சனை முடிந்ததுன்னு பாத்தா, என்னமோ நேர்மை, திராவிடம், பெரியார்னு பேசற. எங்களுக்குச் சொல்லத் தெரியாதா, பெரியார் சிலைக்கு போனவாரம் தான் மாலைப் போட்டோம். அசல்னு ஒண்ணுயிருந்தா போலின்னு ஒண்ணுயிருக்க தான் செய்யும். உலகத்தை புரிஞ்சிக்கையா. (சத்தமா) ஏம்பா, அறிவேந்தி ஒத்துக்கிட்டார். பத்து பேர் எப்போதும் காவலுக்கு இருக்கணும். நாங்களும் வருவோம், திடீர்னு டெல்லி பார்ட்டி வந்தாலும் வரும்" என்று எகத்தாளமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறிவேந்தி "நிறுத்துங்க, எனக்கு உடன்பாடில்ல, கிளம்புங்க" என்றார் கோபமாக. உடனே பழையப்பட வில்லன் பாணியில் நடிகவேள் எம்.ஆர்.ராதா குரலில் அந்த மந்திரி,



"ஒழுங்கா சொன்னாலும் புரியல, இலைமறை தாமரை மறைவா சொன்னாலும் புரியல. இந்தா மேன் அறிவு, நாங்க போனவுடன் போலீஸ் வரும். கண்டெய்னரை ஓப்பன் பண்ணும், உன்னை லபக்குன்னு பிடிக்கும். நீ எது சொன்னாலும் கேக்காது. நாங்க வைச்சது 10 ஆயிரம் கோடி, நீ வைச்சது துப்பாக்கி வெடிகுண்டுகள்ன்னு மாறிடும். கூடவே ரெண்டு டெட்பாடி, போதுமா கோட்சே சிலைக்கு மாலைப் போடறவனெல்லாம் கூட இருக்கும் போது அய்டியா தானா வரும். இன்னொன்று தெரிஞ்சிக்கோ 95% பணம் எங்களிடம் வந்திடும். என்னா சொல்ற நேர்மை, அவுட், காறி துப்புவான். திராவிடம், பெரியார் அண்ணா பாசறையெல்லாம் கனவுல புழல் ஜெயில்ல பாத்துக்க, தோ... பார் அறிவு... தொலைக்காட்சி பேட்டிகள்லே நானே சொல்வேன், 'அறிவேந்தி நல்லவர், நேர்மையான அதிகாரின்னு நம்பி பலப்பணிகள் இந்த அரசு தரனும்னு புரோமஷனுக்கு ரெக்கமன்ட் பண்ணினேன். சே... எவ்வளவு பெரிய ஏமாற்றம். எவனையும் நம்ப முடியல. மக்களுக்கும் நாட்டுக்கும் எப்படித்தான் துரோகம் செய்ய முடிகிறதோ... நினைச்சாலே நடுங்குது. இவனை போன்றவர்களை கடுமையா தண்டிக்கனும்னு சொல்வேன். எப்படி இருக்கு, அறிவு சார்" வஞ்சகப் புன்னகையுடன் பார்த்தான்.

"காலம் இப்படியே போய்விடாது" அறிவு

"இதைவிட மோசமாகவும் போவும்னு சொல்றீயா? திரும்பவும் நாங்க வடக்குடன் வருவோம். நீ சொல்றது பலிக்கும். ஓகே என்ன சொல்றே. நீ பாட்டுக்கு போயிட்டேயிரு. ஒரு வாரம் கழித்து வண்டிங்க பாட்டுக்கு போயிடும் அதுவரை நாங்க பாத்துக்குவோம். உனக்கு எந்த தொல்லையும் வராது. இப்படி ஒன்று நடந்ததையே மறந்திடு ஓகே போ... போ... குடிசைக்கு... சாரி... குடிலுக்கு பணம் வேணும்னா கேளு தரச்சொல்றேன்" பதிவு நின்றது. முத்தையா தொடர்ந்தான்.

– தொடரும்



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
வில்லாளன் ஆகிய இராமன் வாலியை மறைவில் நின்று கொன்றது வீரச்செயல் ஆகுமா?

# பருப்பு கடைதல் விளையாட்டு

இது நவம்பர் மாதம் என்பதால் இந்தியக் குழந்தைகள் குதூகலத்துடன் இருப்பார்கள் காரணம் இந்த மாதத்தில் தான் குழந்தைகள் நாள் கொண்டாடப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் நாள், குழந்தைகள் நாள் என்பதால், அவர்களுக்கு ஆடல், பாடல் விளையாட்டு என பல நிகழ்ச்சிகள் நடத்தி அவர்களை மகிழ்விப்பார்கள். எல்லா மனிதர்களின் வாழ்க்கையும் விளையாட்டில்தான் தொடங்கி, விளையாட்டிலேயேதான் முடிகிறது. மனிதன் விளையாடும் கடைசி விளையாட்டு மரண விளையாட்டு என்பார் கவியரசர் கண்ணதாசன். சமீபத்தில் கூட மத்திய மனித வளத்துறை அமைச்சகம் கிராமத்தில் உள்ள பிள்ளைகள் கூட நம் நாட்டிற்காக விளையாடுவதோடு மட்டுமல்லாமல் பரிசுகளையும் அள்ளி வருகிறார்கள். எனவே இனிமேல்,பள்ளிகளில் பாடத்திட்டத்தை பாதியாகக் குறைத்து மாணவர்களின் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி அவர்களும் மாணவர்களின் புத்தாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்று கூறியிருப்பதும் கல்வியோடு விளையாட்டை ஒருங்கிணைக்கும் நடவடிக்கை என்றே தோன்றுகிறது. இப்படி ஒரு நாட்டின் அரசு புரிந்து கொண்டதை தமிழன் எப்போதோ புரிந்து கொண்டதால்தான், நம்முன்னோர்கள் குழந்தைப் பருவத்திலேயே தம் குழந்தைகளோடு விளையாட்டை ஆரம்பித்து விடுகிறார்கள்.

தமிழர்களின் விளையாட்டை பார்க்கும்போது குழந்தைகள் விளையாட்டு, சிறுவர்கள் விளையாட்டு, இளைஞர்கள் விளையாட்டு, ஆடவர் விளையட்டு, மகளிர் விளையாட்டு, வீர விளையாட்டு என்று வகைப்படுத்தியதில் இருந்தே அதன் தொன்மையை அறிய முடிகிறது. ஒவ்வொரு பருவத்தினருக்கும் விளையாட்டு இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. தமிழர்களில் கிட்டத்தட்ட எல்லா அம்மாக்களும் தங்கள் குழந்தைகளோடு விளையாடும் முதல் விளையாட்டு என்றால் அது பருப்பு கடைதல் என்னும் விளையாட்டாகத்தான் இருக்கும். குழந்தைகள் தங்கள் அம்மாக்கள் பேசுவதை உள்வாங்கி தன் மழலை மொழியில் பேச ஆரம்பிக்கும் ஒரு வயது அல்லது இரண்டு வயதாக இருக்கும்போதே இந்த விளையாட்டை பெரும்பாலும் எல்லா அம்மாக்களும் தங்கள் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுகின்றனர். ஒரு சில கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களில் தாத்தா, பாட்டிகளும் தங்கள் பேரக்குழந்தைகளோடு இதை விளையாடுகின்றனர். இந்த ஒன்று, இரண்டு வயதில் குழந்தைக்கு அப்படி என்னதான் புரிந்து விடப்போகிறது அல்லது குழந்தைதான் இந்த விளையாட்டிலிருந்து



# தமிழர் விளையாட்டுகள்

அப்படி என்ன கற்றுக்கொள்ளப்போகிறது என்று நினைக்கலாம். இந்த விளையாட்டு விளையாடும் முறைகளும் அது நமக்குச் சொல்லிக்கொடுக்கும் வாழ்வியல் பண்புகளையும் தெரிந்துகொண்டால், தமிழர்கள் எப்படி பண்பட்ட விளையாட்டை குழந்தையோடு விளையாடுகிறார்கள் என்பது புரியும்.

பருப்பு கடைதல் அல்லது பருப்பு கடைஞ்சி விளையாடுவது எப்படி என்று பார்ப்போம். தரையில் தவழ்ந்து செல்கிற குழந்தையோ அல்லது தத்தித் தத்தி நடக்கும் குழந்தையைப் பிடித்து உட்கார வைத்து விட்டு, அதன் கையை பிடித்து அதன் விரல்களை விரித்து அதன் ஒவ்வோரு விரலாகப் பிடித்து இது சோறு, இது பருப்பு, இது ரசம், இது மோரு, இது கூட்டு, இது பொறியல் என்று ஒவ்வொரு விரலுக்கும் ஒரு உணவின் பெயரைச்சொல்லுவாள் தாய். பின்பு குழந்தையின் உள்ளங்கையை விரித்துப் பிடித்துக்கொண்டு, தாய் தன் முழங்கையால் பருப்பு கடைவது போலச் செய்துகொண்டு

*“பருப்பு கடை பருப்பு கடை*
*பருப்பு கடைஞ்சி*
*அப்பாவுக்குக் கொஞ்சம்*
*அம்மாவுக்குக் கொஞ்சம்*
*அத்தைக்குக் கொஞ்சம்*
*மாமாவுக்குக் கொஞ்சம்*
*பாட்டிக்குக் கொஞ்சம்*
*தாத்தாவுக்குக் கொஞ்சம்*
*பாப்பாவுக்குக் கொஞ்சம்”*

என்று பாடி கொண்டே அவர்களுக்கெல்லாம் உணவு எடுத்து கொடுத்துவிட்டு குழந்தைக்கும் உணவு ஊட்டுவது போல தாய் நடிப்பாள்.

பின்பு குழந்தையின் கையை நீட்டிப் பிடிச்சி கைமேல் தன் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் காலால் நடந்து வருவது போல செய்து நண்டு வருது நரி வருது என்று பாடிக்கொண்டே கழுத்து வரை விரல்களை நடத்திக் கூசுமாறு செய்வாள். அப்பொழுது அழுகின்ற குழந்தையும் கூச்சத்தால் சிரிக்கும். அப்படி ஒருவேளை கூச்சம் வராவிட்டால் கைகளில் கழுத்துப் பகுதியில் கிச்சு கிச்சு மூட்டிச் சிரிக்க வைப்பாள்.

குழந்தைக்கு உணவு ஊட்டிப் பழகும்போதே நல்ல உணர்வுகளையும்,பழக்கவழக்கங்களையும் ஊட்டி வளர்ப்பதற்கு ஒரு விளையாட்டைப் பயன்படுத்தியவர்கள் தமிழராகத்தான் இருக்கமுடியும்.

பொதுவாகவே ஒருவருக்கு விளையாட்டின் மூலமாகத்தான் பொறுமை, நேர்மை, ஒழுக்கம், கீழ்ப்படிதல், விட்டுக்கொடுத்தல் என அனைத்து நற்குணங்களையும் போதிக்க முடியும் என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள். ஆனால் தமிழனின் பாரம்பரிய விளையாட்டுகள் மூலம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், வெற்றி தோல்விகளைச் சமமாக நினைக்கவும், கூடி விளையாடவும், கூடி வாழவும் தேவையான பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும் என்ற அழுத்தமான படிப்பினையையும் நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.



இந்த பருப்பு கடைஞ்சி விளையாடும் விளையாட்டு நமக்குச் சொல்லிக்கொடுக்கும் வாழ்வியல் பண்பு என்ன?

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.*

என்று வள்ளுவன் கூறிய பகுத்துண்டு வாழவேண்டும் என்ற வாழ்வியல் நெறியை ஒருவன் இதைவிட எளிமையாக குழந்தைகளுக்கு உணர்த்த முடியாது. பசியோடு உள்ள மற்றவர்களுக்கெல்லாம் உணவளித்த பின்பே நாம் சாப்பிடவேண்டும் என்ற உயர்ந்த பண்பும் இருக்கின்ற உணவை பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற உயரிய எண்ணங்களையும் அந்த மழலையின் பிஞ்சு மனதில் பசுமரத்தாணியாக பதியமிடும் விளையாட்டுதான் இந்த விளையாட்டு. அது மட்டுமல்ல எல்லாக் குழந்தையும் பிறக்கும் போது தனது பிஞ்சு விரல்களை மூடிகொண்டேதான் பிறக்கின்றன இந்த விளையாட்டின் மூலம் அந்த பிஞ்சு விரல்களைத் திறந்து விடும் உடற்பயிற்சியாகவும் இந்த விளையாட்டு விளங்குகிறது. குழந்தைகளின் மீது விரல்களால் நடப்பது போன்று செய்வதன்மூலம் அவர்களின் தொடு உணர்வு எவ்வாறு உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவும், அப்படி தோடு உணர்வு சரி இல்லை எனில் இந்த விளையாட்டில் கிச்சு கிச்சு மூட்டுவதன் மூலம் அந்த தொடு உணர்வைத் தூண்டவும் இந்த விளையாட்டு உதவுகிறது. மேலும் இது குழந்தை பேசப் பழகும் பருவத்தில் விளையாடுவதால் தாய் தன் பாட்டில் சொல்லும் பல வகையான உணவின் பெயர்களையும் அதை பகிர்ந்தளிக்கும் போது சொல்லப்படும் உறவுகளின் பெயர்களையும் குழந்தைகள் தெரிந்துகொள்கின்றன.

மனிதனின் முதல் பொழுதுபோக்கே விளையாட்டுதான். உடலுக்கும், மனதிற்கும், மகிழ்ச்சிதருவதும் விளையாட்டுதான். விளையாட்டுதான் மனிதனை சமூகப்படுத்தும் செயல். விளையாட்டுதான் மனிதனின் உடலையும் மனதையும் பாதுகாக்கும் மகத்தான மருந்தில்லா மருத்துவம்.

ஆகவே, உணவுகளையும், உறவுகளையும், உணர்வுகளையும் ஊட்டும் பருப்பு கடைதல் என்னும் விளையாட்டை நம் குழந்தைகளோடு விளையாடுவோம் அது அவர்கள் எதிர்காலத்தில் அவர்களுடைய குழந்தைகளோடு விளையாட வழிவகுக்கும்.

**– இன்னும் விளையாடலாம்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
இராமனும், இலட்சுமணனும் சரையூ நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார்களே, அது கடவுள் தன்மையா?

ஏப்ரல் 11, 1921 இல், சுப்பராயுலு ரெட்டியார் உடல் நலக் குறைவு காரணமாக முதல்வர் பதவியிலிருந்து விலகினார். அவருக்குப் பின் பனங்கன்டி ராமராயநிங்கார் என்னும் இயற்பெயர் கொண்ட பனகல் அரசர் முதல்வராகப் பதவியேற்றார். 1921ஆம் ஆண்டு பனகல் அமைச்சரவையால் இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஆலய நிர்வாகங்களில் நிலவிய ஊழலை ஒழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதோடு நீதிக்கட்சிப் பொருளாதார நிதி சீர்திருத்தங்களையும் இந்த அமைச்சரவை அறிமுகப்படுத்தியது. 1929இல் பணியாளர் தேர்வு ஆணையமாக மாற்றப்பட்ட பணியாளர் தேர்வுக் கழகமே பனகல் அமைச்சரவையால் 1924ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்க.

1922ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத் தொழிற்சாலைகள் உதவிச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பயனாக; சிமெண்ட், அலுமினியம் சர்க்கரை மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதனால் ஏற்பட்ட பொறியாளர் பணிகள் இன்னபிறவெல்லாம் மேற்கண்ட சட்டத்தினால் சாத்தியமாயிற்று. இந்தச் சட்டம் மேலும் நிலம், நீர்ப்பாசன வசதிகள் வழங்கி புதிய தொழிற்சாலைகள் அதனால் உருவாகும் பணிகள் என புதிய வழிவகை செய்தது. 1921 மற்றும் 1922ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டு அரசாணைகள்; மாவட்ட முன்சீப்புகளை நியமிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திடமிருந்து பறிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பார்ப்பனர் அல்லாதவர்களின் இடஒதுக்கீட்டுக்கு வழிவகுத்தன.

இது மிக முக்கியமான ஒரு நடவடிக்கையாகவே தென்னிந்திய வரலாற்றில் பார்க்கப்படுகிறது. அதாவது சமுக ரீதியில் காலம் காலமாக பின்னுக்குத் தள்ளப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கு இட ஒதுக்கீடு முறை அவசியம் என்ற ஒரு கோட்பாட்டை இந்தியாவிற்கு அறிமுகம் செய்த பெருமை நீதிக்கட்சி அரசாங்கத்தையே சாரும் என்றால் அது மிகையல்ல. இதனால் தமது கனவான நீதிக்கட்சித் தலைமையிலான ஆட்சிகள் அவர்களது முக்கிய நோக்கமான பிராமணரல்லாதோர் அரசுப் பணிகளுக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தை ஓரளவு நிறைவேற்றிக் கொண்டது நீதிக்கட்சியின் அமைச்சரவை.

பெண்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்குத் தடையாக இருந்த ஆங்கிலேய அரசின் சட்டத்தை மாற்றி அவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட உறுதிசெய்ததோடன்றி தேவதாசி முறை என்றழைக்கப்பட்டு வந்த பெண்களை இழிவுபடுத்தும் ஒரு வழக்கத்தை முற்றிலும் ஒழித்துக்கட்டியது. நீதிக்கட்சியின் செயற்கரியச் செயல்களைத் தோழமைகள் எந்தவிதமான விருப்பு வெறுப்புமின்றி புரிந்துகொள்ளவேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையிலேயே உண்மை வரலாற்றைப் பதிவு செய்வது நமது கடமையாகவே கருதவேண்டியுள்ளது என்க.

**4**

### தந்தை பெரியார்

தந்தை பெரியாரின் 1919 முதல் 1925வரையிலான காங்கிரசுடனான அரசியல் வாழ்க்கை மற்றும் இதே காலங்களில் தந்தை பெரியார் நடத்திய கள்ளுக்கடை மறியல்; அதைத்தொடர்ந்த அவரது சிறை வாழ்க்கை, காந்தியுடன் சேர்ந்துகொண்டு போராடியதற்காக ஒத்துழையாமை இயக்கத்திற்காக அனுபவித்த சிறை வாழ்க்கை; 1924இல் கேரளாவில் உள்ள திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருக்கும் வைக்கம் எனும் ஊரில் தலித் மக்களும் ஈழவர்களும்

# அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில்
# தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா?

■ ஒரு வரலாற்று ஆய்வு



வ.வே.சு. அய்யர்

கோயிலுக்குள் நுழையவும் கோயில் இருக்கும் வீதிகளில் நடக்கவும் தடைவிதிக்கப்பட்டிருந்ததைக் கண்டித்து கருவறை நுழைவுப் போராட்டத்திற்காக மீண்டும் சிறை வாழ்க்கை என ஏறத்தாழ ஒரு ஆறு ஆண்டுகளைத் தற்காலிகமாக விழுங்கிவிட்டு நேரடியாக 1925ற்கு தோழமைகளை அழைத்துவந்துவிட்டேன்.

மக்களை அறிவின்மையினிருந்து மீட்டெடுக்கவும், தெளிவுடையவர்களாக மாற்றவும் சமுதாயத்தின் ஏளனத்திற்கு உரிய மூடப் பழக்க வழக்கங்களையும், பரம்பரை வழக்கங்களையும் பின்பற்றப்படுவதைத் தொடர்ந்து எதிர்க்கும் நிலையை பார்ப்பனரல்லாத மக்களிடையே கொண்டு செல்லும் பரப்புரையாக 1925இல் தந்தை பெரியார் அவர்களால் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

பெண்ணுரிமை பெண்களுக்கான கல்வியுரிமை கைம்பெண் மறுமணம் தேவதாசி முறை ஒழிப்பு, கல்வி வேலைவாய்ப்பில் பார்ப்பனரல்லாதோருக்கு முன்னுரிமை மற்றும் குழந்தை திருமணத்தைத் தடைசெய்தல் போன்ற செயல்முறைகளை முன்னிறுத்தி பல போராட்டங்களை சுயமரியாதை இயக்கம்


மகாத்மா காந்தி

நடத்தியது. இதை மக்களிடையே எளிமையாகக் கொண்டு செல்ல ஏதுவாக தந்தை பெரியார் உண்மை விளக்கம் பிரஸ் எனும் அச்சகத்தைத் தொடங்கி 2 மே 1925ஆம் ஆண்டு 'குடி அரசு' என்கிற பெயரில் புதிய வார இதழைத் தொடங்கினார்!

மெத்த படித்த காந்தியை பார்ப்பனர்கள் எவ்வளவுதான் மீண்டும் மீண்டும் புறக்கணித்தாலும் அவரை அவமதித்து நூறு சதவிகித சூத்திரனுக்குண்டான அனைத்துவிதமான சனாதானங்களையும் அவர்மீது திணித்தாலும்; காந்தி மட்டும் தொடர்ந்து பார்ப்பனிய மன நிலையிலும் பார்ப்பனர்களை ஆதரிப்பதுமாகவே காங்கிரசில் செயல்பட்டுவந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இந்நிலையில்தான் தந்தை பெரியார் தொடர்ந்து வகுப்புரிமைத் தீர்மானத்தை 1919 முதல் 1925 வரையிலான அனைத்து காங்கிரஸ் மாநாடுகளிலும் முன்வைத்தும்; பார்ப்பனச் சக்திகளாலும் பார்ப்பனர் கைப்பாவையாக இருந்த காந்தியாலும் அது வெற்றிபெறாமல் போனதற்கு காரணம் என்றால் பொய்யல்ல என்பேன்.

இதற்கு சிறந்த உதாரணம் சொல்லவேண்டுமென்றால் சென்னை மாகாணத்தில் சுயமரியாதை இயக்கம் தொடங்கும் முன்பாக அதாவது 1925ஆம் ஆண்டுக்கு முன்பு காந்தி சென்னை வரும்பொழுதெல்லாம் மைலாப்பூரில் உள்ள சீனிவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணையில்தான் உட்கார்ந்திருப்பார். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றிருந்தாலும், காந்தி ஒரு சூத்திரர் என்பதாலேயே அவரை உள்ளே அனுமதிக்கமாட்டார்கள்!

ஆனால் இந்த நிலை 1925ற்குப் பிறகு தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டு முழுவீச்சில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில்; அதுவரையில் திண்ணையில் அமர்ந்துவிட்டு போகும் காந்தி, அதே மைலாப்பூரில் சீனிவாசஅய்யங்கார் வீட்டின் உள்ளே அனுமதிக்கப்பட்டார் என்பது சுயமரியாதை இயக்கத்தின் அறுவடையின் ஒரு பகுதியே என்றால் மிகையல்ல.

ஒருபுறம் வருணாசிரம மனு அதர்மத்தை தெரிந்தே ஆதரிப்பது மறுபுறம் அதே சனாதன அமைப்பு முறைகளை அப்படியே பார்ப்பனர்கள் மனம் கோணாமலிருக்க பின்பற்றுவது; எப்போதும் பார்ப்பனர்களை நம்புவது மற்றும் பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் தம்மைவிட்டால் இந்த மக்களை காக்க யாருமில்லை என்கிற பிம்பத்தை தக்கவைத்துக்கொள்வது என இந்த நான்குவகையான புரிதல்களுடன்தான் காந்தி இந்து முசுலீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார்.

தீண்டாமை இருக்கக் கூடாதென்று பார்ப்பனர்களிடமே மன்றாடி கடைசியில் முடியாமல் சரணடைந்தார் என்பதற்கு சரியான சாட்சி திருநெல்வேலி சேரன்மாதேவி குருகுலத்தை நடத்திவந்த வ.வே.சுப்ரமணிய ஐயரிடமே தீண்டாமைக்கு எதிராக வாதாடி தோற்றுப்போனார் காந்தி என்பதைவிட என்ன வேண்டும் சொல்லுங்கள்.



பார்ப்பனர்களின் சுதந்திரப்பற்று என்பதே அவர்களுடைய வேத, சாத்திரங்கள் அப்படியே காப்பாற்றப்பட்டு; அதன்மூலம் சுயராஜ்யம் என்று ஒன்று வருமானால் மனுநீதியை அரசமைப்புச் சட்டமாகவே ஆக்கவேண்டும் என்கிற தன்னுடைய காவிப்பயங்கரவாத மனநிலையை மராட்டிய திலகர்; தான் நடத்திவந்த தன்னுடைய மராத்தி பத்திரிக்கையான கேசரியில் 11 சனவரி 1917இல் எழுதிய தலையங்கத்தையும்; அன்றைய காலங்களில் அதிகம் விற்பனையான பத்திரிகையான இதில், இதே வன்மங்களுடன் தொடர்ந்து எழுதப்பட்டு சுதந்திரப் பற்று தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளையும் அறியாதவரல்லர் நம்முடைய காந்தி என்றால் வியப்பேதுமுண்டோ சொல்வீர்.

நமது ஆய்வுப் பார்வையில் இந்திய சுதந்திர போராட்டமே பார்ப்பனர்களின் நலனுக்காக, அதாவது இந்து மத சாத்திர, சம்பிரதாயங்களைக் காப்பாற்றவும், ஆங்கிலேய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில், அரசு நிர்வாகங்களில் பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை அப்படியே தொடருவதற்காகவேண்டி; பார்ப்பனிய மனநிலையில் திளைத்து சுரணையற்ற அடிமைகளாக நூறு விழுக்காடு மாறிப்போன பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை சுதந்திர வேட்கை எனும் மாயையில் மூழ்கடித்து; அவர்களை பிரித்தானிய அரசுக்கு எதிராகப் போராட வைக்க காந்தி போன்றோர்கள் கருவிகளாகத் தேவைப்பட்டார்கள் என்பதை காந்தி எனும் மகாத்மாக்களே உணராதபோது; சாதாரண ஆத்மாக்களுக்கு விஞ்ஞானம் வளராத எழுத்தறிவுப் பெறாத அன்றையச் சூழலில் இது புரிந்திருக்க சாத்தியமில்லை என்பதோடு, அடிமைகள் தொடர்ந்து பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகவே இருக்கவேண்டி அதே அடிமைகளால் நடத்தப்பட்ட தந்திரமே பிரித்தானியருக்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டம்.

## சேரன்மாதேவி குருகுல கொடுமைகள்

வெறும் ஆசிரியர் பணியில் இருந்து காங்கிரசிற்குள் வந்த திரு.வி.க. மற்றும் சாதாரண நிலையில் இருந்து வந்த சித்த மருத்துவர் வரதராசுலு போன்றோர்களுடன் அன்றையச் சூழலில் மிகுந்த செல்வச் செழிப்புடன் இருந்து காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்த தந்தை பெரியார்; அவ்வியக்கத்திற்கு மிகுந்த உண்மையுடனும் விசுவாசத்துடனும் நடந்துகொண்டதோடு, காந்தியாருக்கும் இராசாசிக்கும் உண்மையாக இருந்தார் எனினும், அதில் இருந்த பார்ப்பன மற்றும் பார்ப்பனரல்லாதோருக்கான சதிகளையும் பாகுபாடுகளையும் கண்டு கொதித்தெழலானார்.


தொடர் தோல்விகளைச் சந்தித்த வகுப்புவாத பிரநிதித்துவப் பிரச்சினை, கதர்போர்டு சம்பந்தமான உத்தியோக நியமனம் நாயக்கர் கையில் இருக்கட்டும் என்று காந்தி சொல்லியும் அதைக் கேளாமல் கதர் ஆதிக்கம் முழுவதும் பார்ப்பனர்கள் அவர்கள் வசமே இருக்கும்படி பார்த்துக்கொண்டதினால் ஏற்பட்ட கதர் நிறுவனப்பிரச்சனையால் உருவான கசப்பான அனுபவங்கள், சனாதன பார்ப்பனிய அடிமை நிலை என காரணங்கள் நிறைய இருந்தாலும்; காங்கிரசில் இருந்து



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்த ஆண்டவன்,
அடுத்த திருவிளையாடல் புரிய எப்போது வருவார்?

வெளியேறியதற்கு மிக முக்கிய காரணமாக சேரன்மாதேவி குருகுலக் கொடுமைகள் மட்டுமே என்கிறார் தந்தை பெரியார்.

வரகனேரி வேங்கடேச சுப்ரமணிய ஐயர் அவர்களால் ஆசிரமம் என்கிறபெயரில் முதலில் கல்லிடைக்குறிச்சியில் அமைக்கப்பெற்று, பின்னர் சுமார் முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் திருநெல்வேலியை அடுத்த சேரன்மாதேவியில் *8 டிசம்பர்-1922*இல் பார்ப்பனரல்லாதாரின் பொது நிதியில் உருவாகி; பள்ளியாக நடத்தப்பட்டு புது வடிவம் பெற்றதுதான், வருணாசிரம சனாதன அமைப்புகளை அப்படியே முறைப்படுத்தப்பட்டு மனு அதர்ம பயிற்சியுடன் கையாளப்பட்ட பரத்துவாஜ ஆசிரமம் எனும் குருகுலம்.


தந்தை பெரியார்

தொடக்கத்தில் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாதார் என எல்லோரும் இருபது வயதிற்குட்பட்ட சுமார் முப்பதுக்கும் குறைவான மாணவர்கள் இந்த குருகுலத்தில் பயின்றனர். இவ்வளவு பெரிய நிலப்பரப்பில் தொடங்கப்பட்ட குருகுலத்தில் மத துவேசம் கருதி பார்ப்பனர்களுக்கு மற்றும் சூத்திரர்களுக்கு என்று இருவேறு உணவு பரிமாறும் பந்திகள் தனித்தனியே நடத்தப்பட்டதோடு; சூத்திர மாணவர்களுக்கு பழைய சோறும் பார்ப்பன மாணவர்களுக்கு உப்புமாவும் வழங்கப்பட்டது. இதற்கு இடவசதி போதாமையால் இரண்டு பந்திமுறை என்று சமாளிக்கிறார் வரகனேரி வேங்கடேச சுப்ரமணியம் எனும் வ.வே.சு. அய்யர். அதோடு விட்டால் பரவாயில்லை பார்ப்பன மாணவர்களுக்கு வேத உபநிடதங்களும் சூத்திரர்களுக்கு தேவாரத்தையும் திருவாசகத்தையும் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன.

தம்முடைய மலேயா நண்பரின் அய்யத்தைப் போக்க வேண்டியும் உண்மையில் என்னதான் அங்கே நடக்கிறது என்பதையறிய வரதராசுலு அவர்கள் குருகுலத்திற்கு சென்றபோது; அவர் கண்டதெல்லாம் அக்மார்க் வருணாசிரம மனு அதர்ம கொடுமைகளே. இதை மாற்றிக்கொள்ளுமாறும் இளமையிலேயே இப்படிப்பட்ட மத வேற்றுமை எனும் நச்சை மாணவர்களிடையே விதைப்பதால் நாட்டிற்கு கேடு எனவே இதை தாமாகவே முன்வந்து சரிசெய்துவிடுமாறு நேராகவே வ.வே.சு.விடம் சொல்லிப்பார்த்தார். இதற்கிடையில் இந்த விடயம் மெல்ல மெல்ல பொதுவெளியில் கசியத்தொடங்கியது. ஆனால் அய்யர் எதையும் கேட்காத நிலையில்; இதே கருத்தை வலியுறுத்தியும் சேரன்மாதேவியிலேயே ஒரு சிறிய மாநாடு ஏற்பாடு செய்து எல்லோரின் கருத்துக்களையும் கேட்டு நல்ல முடிவிற்கு வருமாறு *17 அக்டோபர் 1924*இல் திரு. வி.க நவசக்தியில் எழுதுகிறார்.

பிரித்தானிய கல்விமுறைகளால் இந்திய சுதந்திரத்திற்கோ அல்லது தேசியத்திற்கோ பயன்படாது மாறாக தேசியப் பள்ளிகள் மட்டுமே விடுதலைப்போராட்டத்திற்கு பயன்தரும் என்கிற காந்தியின் கொள்கையை ஏற்றதன் விளைவாக; வ.வே. சு. அய்யர் சேரன்மாதேவி ஆசிரமம் தொடங்க காரணமாயிற்று. அதற்கு பலம் சேர்க்கும் வகையில் அப்பொழுது எல்லோரும் காந்தியுடன் ஒன்றாகச் செயல்பட்டதால் அன்றைக்கு இருந்த பலம் வாய்ந்த பத்திரிகைகளான இந்து, குமரன், சுதேசமித்திரன், தமிழ்நாடு, நவசக்தி ஆகிய இதழ்கள் குருகுலத்துக்கு உதவுமாறு கட்டுரைகளையும் அது தொடர்பான முக்கிய செய்திகளையும் பிரசுரித்து வந்தன.

இதனால் இந்த செயல்வடிவத் திட்டத்திற்கு முதலாண்டு தேவையாக பத்தாயிரத்து இருநூறு ரூபாய் தேவையாக இருந்ததால், காங்கிரசு கமிட்டிக்கு அய்யர் விண்ணப்பித்திருந்தார். காங்கிரசின் தேசிய நிதி ஆதாரத்தின் மூலம் இந்த பெருந்தொகையை இரண்டு தவணைகளாக தலா ஐயாயிரம் வீதம் கொடுக்க ஒப்புக்கொண்டதோடு, அதன் முதல் தவணையாக ஐயாயிரம் ரூபாயை அய்யரிடம் வழங்கியது. ஆசிரமத்திற்கு தேவையான முப்பது ஏக்கர் நிலமும் வை.சு.சண்முகம் செட்டியார் அவர்களின் நிதியின் பங்களிப்பினால் வாங்கியாயிற்று. பார்ப்பனரல்லாதோரும் கல்வி கற்க வேண்டும் சமுதாயத்தில் எல்லோரும் பார்ப்பனருக்குச் சமமாக உயர வேண்டும் மற்றும் சனாதான அமைப்புமுறை முற்றிலும் ஒழிய வேண்டும் என்கிற உயர்ந்த இலட்சியம் கொண்ட தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக தந்தை பெரியார் அப்பொழுது இருந்ததினால், மேற்சொன்ன முதல் தவணையான ஐயாயிரம் ரூபாயும் சாத்தியமாயிற்று.

இதுதவிர மலேயா நிதியாக பெருந்தொகையும் கிட்டியது. ஆனால் எல்லாமே விழலுக்கு இறைத்த நீராகப் போனதை நினைத்து தாம் பார்ப்பனரல்லாதாருக்கு பெரும் தவற்றை செய்துவிட்டதாக நினைத்து வரதராசுலு நாயுடு மனம் வருந்தினார். இந்நிலையில் பலமுறை தந்தை பெரியார் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியும், தொடர்ந்து ஆசிரமத்தில் நடந்த வர்ணாசிரம மனு அதர்மங்களையும் சனாதனப் பாகுபாடுகளை எதிர்த்தும்; அய்யரின் காவி வெறிபிடித்த அடாவடித்தனத்தையும் பார்ப்பனரல்லாதோரின் மீதான வன்மங்களைக் கண்டித்தும், பலமுறை போர்தொடுத்ததையும் மீறிய செயலாக இருந்த அய்யரின் அடாவடிப்போக்கிற்கு பெருங்காரணமாகிப்போனது எதுவெனில், அய்யரின் மீதிருந்த டாக்டர் நாயுடுவின் அதீத நம்பிக்கையும் கண்மூடித்தனமான ஆதரவுமே ஆகும்.

தாம் எவ்வளவு சொல்லியும் கேக்காத அய்யரை சுதேசமித்திரன் தவிர ஏனைய பத்திரிக்கைகள் எதிர்த்தன. இந்த செய்தி காந்தியின் செவிக்குச் செல்லவே அவரும் தம் பங்கிற்கு சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார் அவ்வளவே. சனாதன அட்டூழியம் மட்டும் வெற்றிகரமாக அந்த குருகுலத்தில் தொடர்ந்தது என்பது உண்மை. இதைத்தான் வரதராசுலு நாயுடு குருகுலம் கிளைவிட்டு வளரத் தொடங்கி இருக்கிறது; ஆனால், அதன் வேர் அழுகத் தொடங்கியிருக்கிறது என்று தன்னுடைய பிரசுரமான தமிழ்நாடு இதழில் எழுதினார்.

பார்ப்பனர்கள் தீண்டாமையையோ தேசிய ஒருமையையோ பேசுகிறார்கள் அல்லது அதன்மூலம் எல்லோரும் சமமாகத் தேசியத்தை ஆதரிக்கும்பொருட்டு ஏதேனும் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றால்; அதில் ஒருபோதும் பார்ப்பனரல்லாதோருக்கான நலன் இருக்கமுடியாது. எனவே பார்ப்பனர்கள் பேசும் தீண்டாமையோ தேசியமோ எதுவாயினும் வீண் என்று தொடர்ந்து களமாடிய தந்தை பெரியாரின் இச்செயல்; தமிழ்நாட்டில் எல்லோரிடத்திலும்

ஒரு அதிர்வை உருவாக்கியது என்பது உண்மை. அய்யரின் இத்தகைய குருகுலக் கொடுமைகளை ஒழிக்கவேண்டுமானால் நிதி ஆதாரத்தை நிறுத்தவேண்டும் என்று எண்ணியதன் விளைவால், பார்ப்பனரல்லாதார்களின் நிதி ஆதாரங்கள் முற்றிலும் நின்றுபோனது மட்டுமன்றி ஆசிரமும் ஒரு முடிவிற்கு வந்தது.

இந்த சேரன்மாதேவி குருகுல அட்டகாசங்களும் அதன் பின்னணியும் தந்தை பெரியாரை வேறொரு புதிய பாதையை தேர்வு செய்ய ஏதுவாகத் தூண்டியது. இதற்கடுத்து 1925ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் காஞ்சிபுரத்தில் கூட்டப்பட்ட திரு.வி.க.தலைமையிலான தமிழ் மாகாண மாநாட்டில், இருபத்தைந்து பிரிதிநிதிகளின் கையொப்பத்தை பெற்று வகுப்புவாரித் தீர்மானத்தைக் கொண்டுவந்தார் தந்தை பெரியார். ஆனால் அதை ஒழுங்கற்றத் தீர்மானம் என்று மாநாட்டுத் தலைவர் திரு.வி.க. அனுமதி மறுத்துவிட்டார்.

இதனால் கோபமடைந்த தந்தை பெரியார் முழுவதும் பார்ப்பனமயமாகிப்போன பார்ப்பனரல்லாதார் நலனுக்காக ஒன்றுக்கும் உதவாத இந்த காங்கிரசில் தொடர்ந்து இருப்பதில் எந்த நன்மையும் ஏற்படாது என்பதால் நான் இப்பொழுதே காங்கிரசை விட்டு வெளியேறுகிறேன் என்று மாநாட்டுத் தலைவரிடம் சொல்லிவிட்டு; இனி காங்கிரசை ஒழித்துக்கட்டுவதே எனது முழுமுதல்பணி என்று மாநாட்டு பந்தலில் இருந்து வெளியேறினார் தந்தை பெரியார்.

அவருக்கு ஆதரவாக அப்பொழுதே மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், கோவை டி.ஏ.ராமலிங்க செட்டியார், மணப்பாறை திருமலைச்சாமி, சர்க்கரைச்செட்டியார், எஸ் இராமநாதன் போன்றோர்களும் அவருடன் மாநாட்டுப் பந்தலிலிருந்து வெளியேறினர். காஞ்சி மாநாட்டின்போது அப்பொழுதே அங்கேயே தந்தை பெரியாரின் முயற்சியால் பார்ப்பனரல்லாதார் மாநாடு ஒன்று கூட்டப்பெற்று; தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க கோவை டி.ஏ.ராமலிங்க செட்டியார் தலைமையில் வெற்றிகரமாக நடந்தேறியது.

இம்மாநாட்டில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரிவினை இல்லையென்பது உடலில் உள்ள புண்ணை இல்லை என்று மறைத்து அழுகவிடுவதற்கு ஒப்பாகும். அதற்கேற்ற மருத்துவம் செய்து புண்ணை குணமாக்க முயல்வதே சமூக பொதுநோக்குடைய அறிஞர் கடமையாகும் என்று பேசிய தந்தை பெரியாரின் தொடர் பலப்பல முயற்சிகளாலும் போராட்டங்களாலும்தான்; அதுவரையில் சூத்திரர்களின் இடுப்பிலிருந்த துண்டு தோளுக்கு ஏறியது! கும்பிடுறேன் சாமி என்ற சொல் வணக்கம் என்றானது! சலவைக்காரர் வீடு பானை செய்கிறவர் வீடு, செருப்பு தைப்பவர் வீடு என்றிருந்த நிலை மாறி, மருத்துவர் வீடு, ஆசிரியர் வீடு, மாவட்ட ஆட்சியர் வீடு, பொறியாளர் வீடு, வழக்கறிஞர் வீடு என்று மாறியது!

ஆனால் இந்த மாற்றங்கள் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நிகழ்ந்தவைகள் அல்ல! அதற்காக தந்தை பெரியாரும் அவருடைய தோழர்களும் பட்ட துன்பங்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு விலைகொடுக்கமுடியாது என்க. அவைகளை ஒவ்வொன்றாக வரும் தொடர்களில் பார்க்கலாமே தோழமைகளே......!

அதுவரையில் உங்களுடன் நானும் சேர்ந்து ஒரு தேநீர் அருந்திவிட்டு மீண்டும் தொடர் ஐந்தில் வருகிறேனே!

**– ஆய்வு தொடரும்**

பேரா. **பழ.வெங்கடாசலம்**

மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## மூன்று தனித்தனி இரும்பு வளையங்கள் ஒன்றுக்குள் ஒன்று ஒன்றாக இருப்பது - பின் மீண்டும் தனித்தனியே வருதல்

### தேவையானப் பொருட்கள்

மூன்று வளையங்கள் (சுமார் 9” விட்டம்)

### மேஜிக் செய்யும் முறை

மேஜிசியன் தன்னை மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட சற்று மாறுபட்ட உடையில் இருத்தல் சிறப்பு. மூன்று சமமான இரும்பு வளையங்களை எடுத்துக் காட்டி அவை அனைத்தும் உறுதியானவை துண்டானதல்ல என்பதைப் பார்வையாளர்களுக்கு மனதில் நம்பிக்கை ஏற்பட வைக்க வேண்டும்.


பின்னர் இந்த தனித்தனி வளையங்களில் இரண்டை எடுத்து ஒன்றுக்குள் ஒன்று இருப்பதாக முதலில் செய்ய வேண்டும். ஒரு வளையத்திற்குள் உள்ள மற்ற வளையத்தைச் சுழற்றிக் காண்பிக்கவும். பார்வையாளர் கவனம் மாறி இருக்க நமது கைகளை வளையங்களைக் கொண்டு சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

அதேவேளை மூன்றாவது வளையத்தையும் முன்புபோல் உள்ளே விழவைத்து மூன்றும் ஒன்றுக்கொன்று இணைந்து இருப்பதைக் காட்டவும்.

பின்னர் மந்திரம் போடுவது போல் செய்து ஒவ்வொரு வளையத்தையும் போட்டது போலவே தனித்தனியாக எடுத்துக் காட்டவும். இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### மேஜிக் இரகசியம்

மூன்று சமமான வளையங்களில் ஒன்றை மட்டும் ஓரிடத்தில் கத்தரித்து வைத்துக் கொள்ளவும். அது பார்ப்பதற்கு சிறிதும் தெரியாத வகையில் இருக்க வளையம் விறைப்பானதாக இருக்க வேண்டும். மேலும் அந்த பகுதியை நம் உள்ளங்கை பகுதியிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். மற்ற வளையத்தை எடுத்து ஒன்றோடு ஒன்று சேர்ப்பது போல் பலமுறை செய்து வெட்டுப்பட்ட பகுதியில் வளையத்தை உள்ளே விடவேண்டும். இதேபோல் மற்ற வளையத்தையும் செய்யவும்.





**குறிப்பு:** இதை பலமுறை தனியே செய்து பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

“சாதி வேறுபாடுகளைக் காட்டினால் தண்டனை” என்பது நம்நாட்டுச் சட்டம். ஆனால், நால்வகைச் சாதிகளையும் நானே படைத்தேன்” என்று கீதையில் கண்ணன் முழங்கினானே, இது அவமானமில்லையா?

கவிஞர். **நா.காமராசன்** மண்டகொளத்தூர்



# ஊர்ப்பறவை



ஊருக்குப்போகிற அந்த
பேருந்துப்பயணம்!

எண்ணும்போது சில
சிலிர்ப்புகளைக் கிளறிச்செல்லும்!

பாரிமுனை எல் ஐ சி அண்ணா மேம்பாலம்
கடந்து செல்கையில் கண்கள்
அகல மறுக்கும் சன்னல்தாண்டி!

சிலநேரம் பேருந்து
புறக்கணிப்பும் நடக்கும்
அந்த சன்னலோர இருக்கைக்காக!

சைதாப்பேட்டை தாண்டி இடதுபக்கமே
சுழலும் கண்கள்
எப்போது வரும் மீனம்பாக்கம் என்று
வட்டமடித்து ஓய்வெடுக்கும்
விமானத்தை அருகில் ரசிக்க!

பல்லாவரத்தை சீக்கிரம்
தாண்டிவிடவேண்டும்
பவுடர் கம்பெனியின் வேதிப்பொருள்
மூக்கைத் துளைக்கும்!



தாம்பரம் நெருங்கையில்
பண்ருட்டி பலாவும் மணப்பாறை
முறுக்கும் கூவி அழைக்கும்!

இரும்புலியூர் பாலத்தைத்தாண்டி
அறிஞர் அண்ணா உயிரியல்பூங்கா
உங்களை அன்போடு அழைக்கிறது!

புளியமரங்கள் அணிவகுத்து
வரவேற்கும் செங்கல்பட்டுவரை
பாலாற்றுப்பாலத்தை கடக்கும்போது
எட்டி எட்டிப்பார்ப்பேன்
எப்போதும் ஓரத்தில் வற்றாமல்
ஓடும் அந்த சிற்றோடையை!

புக்கத்துறை கூட்ரோடு திரும்புகையில்
சொல்லிக்கொள்வேன் இன்னும்
இரண்டு மணிநேரம்தான்
நாம் இறங்கும் இடமென!

பாடத்தில் படித்த உத்திரமேரூர்
கல்வெட்டைப் படிக்கவே பதைபதைக்கும்
மானாம்பதி கூட்ரோடு திரும்புகையில்
வந்தவாசி வந்ததாய் உள்ளுணர்வு!

பொன்னூர்மலைதாண்டி நெடுங்குணம்
வரும்போது இன்னும் அரைமணி
நேரம் இந்தப்பேருந்தும் இருக்கையும்!

ஒருவழியாய் சிற்பங்கள் வடிக்கும்
முடையூரைத்தாண்டியாகிவிட்டது
இன்னும் இரண்டு புளியமரங்கள் தாண்டி
அந்த இறக்கத்தை பிடித்துவிட்டால்
எப்போதோ எழுதிய மண்டகொளத்தூர்
மஞ்சள் பலகையில்!

துள்ளலோடு இறங்கி நடந்தேன்
அந்தக் குறுகிய சிமெண்ட்சாலையில்
இப்போதுதான் திடுக்கிட்டேன்
கண்டக்டரிடம் மீதிசில்லறை
இருபத்திமூணு ரூபாய் வாங்க மறந்ததை!

அதெல்லாம் ஒரு கனாக்காலம்! •



நீ வணங்கும் முருகன் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டதை ஏற்றுக் கொண்ட நீ,
மனிதன் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டால் வெறுப்பது ஏன்?




கதை, சிறுகதை, நாவல்,
கவிதை, கட்டுரை,
பகுத்தறிவு,
தமிழ் இலக்கியம்,
ஆன்மிகம், சூழலியல்,
அரசியல், சினிமா,
கம்யூனிசம், வரலாறு,
தமிழ்த்தேசியம், அறிவியல்
ஆராய்ச்சி,
தலைவர்களின்
வாழ்க்கை வரலாறு,
சிறுவர் நூல்கள், காமிக்ஸ்,
சித்தர்கள், ஜோதிடம்
போன்ற
எண்ணற்ற தலைப்புகளில்
நூல்கள் வாங்க
ஒரே இடம்.



மெல்ல தமிழ் கற்கும் குழந்தைகளுக்கான
எளிய தமிழ் நூல்கள்

1. அறிவுத்தென்றல் தமிழ்வாசகம்
2. அறிவுடைநம்பி தமிழ்வாசகம்
3. செல்லக்கிளி தமிழ்வாசகம்



எளிய தமிழ் நூல்கள்!

16/09/2018 தினமணி கதிரில்
நூலின் விரிவான அறிமுகம்

தமிழ் எழுத்துக்கள் கற்க 247 எழுத்துக்கள் தேவை இல்லை
18+18 எழுத்துக்கள் மட்டும் போதும்

அறிமுகக் கையேடு மற்றும் தகவல்களுக்கு
தொடர்பு கொள்ளவும்

திருவள்ளுவர் பொத்தக இல்லம்

# 51/25A, Dr. L.S.N. வணிக வளாகம்,
ஆறுமுக ஆசாரி தெரு, (ராதா துணியகம் அருகில்)
தருமபுரி – 636701
அலைப்பேசி : 93602 24172




இளமை காலத்தில் அரசியலில் தொண்டரணியிலும் மாணவரணியிலும் வீணடித்து வயோதிகத்தில் கட்சியின் உயர்பதவிகளை வகித்து ஊழல் செய்வதை சமரசம் செய்துகொள்கின்றனர். இதனை மாற்றியமைத்து இளைய சமுதாயத்தை கட்சியின் முதன்மை பதவிகளில் அமர்த்தி சட்டமன்ற பாராளுமன்றங்களில் இளைய சமுதாயத்தின் குரல் ஒலிக்கச்செய்து சமரசமற்ற மக்கள் பணி செய்ய வேண்டும் என்று ஒற்றை நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி **மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்.**



**செ.இப்ராஹிம் பாதுஷா**
நிறுவனர் & தலைவர்



**செ.சார்லஸ் அந்தோனி**
பொதுச் செயலாளர்



**ப.யுவராஜன்**
ஒருங்கிணைப்பாளர்



**மு.சரவணாகுமார்**
பொருளாளர்

**தலைமை அலுவலகம்:**
16, ராமுகாலனி முதல் வீதி, தனலட்சுமி திரையரங்கம் பின்புறம்,
கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607.

CONTACT: **90426 25725, 95851 16796, 80129 36465**

MAIL ID : MJMKTAMILNADU2017@GMAIL.COM WEBSITE : WWW.MJMKTAMILNADU.COM

FB : MJMKTAMILNADU FB LIKEPAGE: மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்



FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com


அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

PRINTED MAGAZINE BOOK POST - PRIVATE CIRCULATION

Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.